Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 127 | சனிக்கிழமை 02 ஏப்ரல் 2022 | பங்குனி 19 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 40/=

## பஸில் அமெரிக்காவில்

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச அமெரிக்கா சென்றுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன. மருத்துவத் தேவையொன்றுக்காக அவர் நேற்றுக் காலை இலங்கையில் இருந்து அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கொழும்பில் பதற்றம்!

- பல்கலை மாணவர்கள் கொதிநிலை
- பொதுமக்களுக்கும் தன்னெழுச்சி
- பொலிஸ், இராணுவம் குவிப்பு
- இரவிரவாக முறுகல் நிலை!
- பல இடங்களில் இணைய சேவை முடக்கம்



கொழும்பு, ஏப்ரல் 2

அரசாங்கம் உடன் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பித்த ஆர்ப்பாட்டங்கள் நேற்றும் பூதாகரமாக வெடித்துள்ளன. கொழும்பு விஜேராம பகுதியிலும் இதர பகுதிகளிலும் இந்தப் போராட்டங்கள் மிகத் தீவிரம் பெற்றுள்ளன. 15

## மேல்மாகாணத்தில் வந்தது ஊரடங்கு!

கொழும்பு, ஏப். 2

கொழும்பு மற்றும் அதனை சூழவுள்ள புறநகர் பகுதிகளில் நேற்றைய தினமும் தன்னெழுச்சிப் போராட்டங்கள் வெடித்தன. இதனையடுத்து நேற்றையதினமும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எரிபொருள் நெருக்கடி, தொடர் மின்வெட்டு மற்றும் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், இதர சில கோரிக்கைகளை முன்வைத்துமே இந்தப் போராட்டங்கள் 15

## இடைக்கால அரசை அமைக்காவிடின் உடனடியாக வெளியேற சு.க. தயார்!

### தயாசிறி மிரட்டல்தொனி

கொழும்பு, ஏப். 2

'நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய வகையில் இடைக்கால அரசொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அமைச்சு 15

## மிரிஹான மக்கள் போராட்டம் பயங்கரவாத நடவடிக்கையாம்

### அமைச்சரின் பேச்சால் சர்ச்சை

கொழும்பு, ஏப். 2

மிரிஹான பகுதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை 'பயங்கரவாத செயற்பாடு' என விமர்சித்துள்ள அரசு, கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக 15

## அமைதியாக போராடுங்கள்!

### அங்கஜன் 'அட்வைஸ்'

யாழ்ப்பாணம், ஏப். 2

பொருளாதார நெருக்கடியால் ஆளும் தரப்புக்கு எதிராக 15

# நாட்டில் அவசரகாலநிலை!

கொழும்பு, ஏப் 2

ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் நாட்டில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபயவால் இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று இரவு வெளியிடப்பட்டது.

நாடு முழுவதும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தீவிரம் பெற்றுவரும் நிலையில் இவ்வாறு பொதுஅவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டால் நாட்டில் முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் அதிகாரங்கள் அதிகரிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## பொலிஸார் முன்னிலையில் கோத்தாவின் அடிவருடிக்கு ஆர்ப்பாட்டத்தில் தர்ம அடி!

யாழ்ப்பாணம், ஏப். 2

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்த அருண் சித்தார்த் என்ற நபர், 15

## மிரிஹான போராட்டம் பின்னணியில் சூழ்ச்சியா? ஆராய்கிறதாம் பொலிஸ்

கொழும்பு, ஏப். 2

மிரிஹான போராட்டத்தின் பின்னணியில் 'சூழ்ச்சி' ஏதேனும் உள்ளதா என்பது தொடர்பிலும், மக்கள் 15

## ஆளுங்கட்சி நேற்று அவசர ஆலோசனை

கொழும்பு, ஏப். 2

ஆளுங்கட்சியின் அவசர நாடாளுமன்றக் குழுக்கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்றிரவு நடைபெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, மூத்த அமைச்சர்கள் உட்பட 15


## அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய பெண்கள் சக்தி ஆரம்பித்தது பேரணியை

கொழும்பு, ஏப். 2

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இல்லத்துக்கு அருகில் நேற்றுமுன்தினமும், நேற்று அதிகாலையும் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னரான ஒளிப்படங்கள். பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோர் ஜனாதிபதியின் இல்லத்துக்கு நேற்றுக்காலை சென்றமை குறிப்பிடத்தக்கது.

# அரபு வசந்தத்தை உருவாக்க போராட்டக்காரர்கள் முயற்சியாம்

## ‘உருட்டுகிறது’ ஜனாதிபதி ஊடகப் பிரிவு

**கொழும்பு,ஏப்.2**

**நுகேகொட மிரிஹானவில் ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட போது, இடையில் புகுந்த அடிப்படைவாதக் குழுவினர் வன்முறையைத் தூண்டினர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போராட்டத்தில் இரும்பு, ஆயுதங்கள் மற்றும் பொல்லுகளை ஏந்திய குழுவினர், ஆர்ப்பாட்டக்காரர்களைத் தூண்டிவிட்டு, ஜனாதிபதியின் இல்லத்தை நோக்கி பேரணியாகச் சென்று கலவரத்தை ஏற்படுத்தினர். வன்முறையில் ஈடுபட்டவர்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படைவாதிகள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாட்டில் அரபு வசந்தத்தை உருவாக்குவோம் என்று கோசமிட்டே அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். கலவரக்காரர்கள் திட்டமிட்ட வகையில் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி, மக்களைத் தூண்டிவிட்டு, நாட்டில் அராஜகத்தை ஏற்படுத்தியுள்ளமை கைது செய்யப்பட்டவர்கள் மூலம் தெரிய வந்துள்ளது - என்றுள்ளது.

(ஒ-4,இ)

# ஜனநாயகப் போராட்டத்தை அடக்கி, ஒடுக்கும் அரசு

## ஜெபநேசன் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.2



ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்பாக ஜனநாயக ரீதியிலேயே மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதனை அடக்கி, ஒடுக்க முயலும் அரசின் நடவடிக்கை கண்டனத்துக்குரியது.

இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

போராட்டக்காரர்களும் ஊடகவியலாளர்களும் இராணுவம் மற்றும் பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளனர். இதற்கு வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கின்றோம். மக்கள், பொருள்களின் விலையேற்றம், எரிபொருள் பிரச்சினை, பஞ்சம்போன்ற பிரச்சினைகளுக்கு எதிராகவே போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆசியாவின் ஆச்சரியமாக நாட்டை மாற்றுவதாகக்கூறி, வங்குரோத்து நிலைக்குள் தள்ளியுள்ளது இந்த அரசாங்கம். எனவே இவர்கள் பதவிகளை விட்டு விலகி ஆட்சியை மக்களிடம் கையளிக்க வேண்டும் - என்றார்.

(ஒ-4,27)

# மக்கள் போராட்டங்களை திசைதிருப்ப அரசு முயற்சி

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு

திருமலை,ஏப்.2

மக்களின் கிளர்ச்சிப் போராட்டங்களை, அடிப்படைவாதத்தைச் சாடி, அரசாங்கம், திசைதிருப்ப முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

போராட்டத்தின் பின்னவில், அடிப்படைவாதிகள் இருக்கின்றனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவிக்கையில்;

எரிபொருள், மின்சாரம் மற்றும் உணவுப் பொருள்கள் என அடிப்படை வசதிகள் இன்றி, இன்னல்களைப் பொறுக்கமுடியாமல் மக்கள் அனைவரும் வீதிக்கு இறங்கும் நிலை வந்துள்ளது.இதன்ஆரம்ப கட்டமே மிரிஹானயில் இடம்பெற்றது.

இந்த நிலைமை இன்னும் மோசமாகலாம். மக்கள் கிளர்ச்சியை அடிப்படைவாதம் என்ற பெயரில் அரசாங்கம் திசைதிருப்ப முயல்கின்றது. அடிப்படைவாதம் பேசி மக்களை ஏமாற்றி, வாக்குப் பெற்றதன் சாபத்தையே இந்த அரசாங்கம் இப்போது அறுவடை செய்கின்றது. இதில் இருந்து பாடம் கற்காமல் மீண்டும் மீண்டும் அடிப்படைவாதம், மதவாதம் பேசி மக்கள் போராட்டத்தைத் திசை திருப்ப முயல்வது நிலைமையை இன்



னும் மோசமாக்கும்.

பட்டினியால் வாடும் மக்களுக்கு அடிப்படைவாதம் சோறு போடாது அடிப்படைவாதத்துக்குப் பின்னால் ஜனாதிபதி ஒழிந்துகொள்ளாமல் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்குரிய நாட்டை உருவாக்க வேண்டும். இல்லை என்றால் இதைவிட பெரும் போராட்டங்கள் நாடு முழுவதும் நடைபெறும் - என்றார்.

(ஒ-4,இ)

# ஜனாதிபதி இல்லத்துக்கு பிரதமர்

## திடீர் விஜயம்

கொழும்பு,ஏப்.2

மிரிஹானவிலுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இல்லத்துக்கு, பிரதமர்மஹிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினர் நேற்று திடீரென விஜயம் செய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு பொதுமக்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்துகொழும்பின் பல பகுதிகளில் திடீரென ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் பிரதமர், அமைச்சர் நாமல் ராஜபக்ச ஆகியோர் ஜனாதிபதி இல்லத்துக்குச் சென்றுள்ளனர்.

(ஒ-4,இ)



# ஊடகவியலாளரைத் தாக்கி கைது செய்தனர் பொலிஸார்

கொழும்பு, ஏப். 2

ஜனாதிபதி இல்லத்தின் மீதான தாக்குதல் மற்றும் மக்கள் போராட்டங்கள் தொடர்பில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர் சஞ்சீவ மீது பொலிஸார் தாக்குதல் நடத்தி அவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

(ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கைதானவர்களுக்கு எதிராக

# பயங்கரவாத தடைச் சட்டத்தை பிரயோகிக்க வேண்டாம்

## மனித உரிமை ஆணைக்குழு அழுத்தம்

**கொழும்பு, ஏப்.2**

**மிரிஹான சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.**

மிரிஹானவில் ஜனாதிபதி இல்லத்தை முற்றுகையிட்டு மக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தை நேற்று முன்தினம் முன்னெடுத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடை சட்டடத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை மிரிஹான சம்பவம் தொடர்பான நிலைமையை ஆராய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறப்புக்குழுவொன்று, மிரிஹான பொலிஸ் நிலையத்துக்குச் செல்லவுள்ளது.

(ஒ-4-இ)

## மிரிஹான போராட்டம்; இதுவரை 54 பேர் கைது

கொழும்பு, ஏப்.2

கொழும்பு, மிரிஹான பகுதியில் இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் பெண்ணொருவர் உட்பட 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மக்கள் ஒன்றுதிரண்டு நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பஸ், ஜீப், பல முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பிலேயே 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் பெண் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்த 37 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 14 பேர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர். மூவர் பொலிஸார். மூவர் ஊடகவியலாளர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-4-இ)

## மிரிஹானவில் கைதானவர்களுக்கு சட்டத்தரணிகள் மன்றத்தால் உதவி

கொழும்பு, ஏப்.2

மிரிஹான கலவரத்தைத் தொடர்ந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டோருக்கு உதவ, மக்களுக்கான சட்டத்தரணிகள் மன்றம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் சட்டத்தரணிகள் மன்ற ஒருங்கிணைப்பாளர் சேனக பெரேரா தெரிவிக்கையில், மின்சாரம் துண்டிக்கப்பட்டமை, எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை குறித்தே மக்கள் ஆர்ப்பாட்டத்தில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

கண்ணீர்ப் புகை, நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் பல நபர்களை கைது செய்ததன் மூலம் தமது பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கும் மக்களுக்கு, அரசாங்கம் பதிலடி கொடுத்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஜனாதிபதித் தேர்தலைக் கோரவில்லை. தங்கள் தேவைகளையே கோரினர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டால், அத்தகைய நபர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கடமை மக்கள் சட்டத்தரணிகள் அமைப்புக்கு உண்டு -என்றார்.

(ஒ-4-இ)

பொலிஸ் நிலையம் முன்பாக நேற்றுத் திரண்ட சட்டத்தரணிகள்.



## சுகாதார அமைச்சு நேற்று முற்றுகை

அரச குடும்பநல சுகாதார சேவை சங்க உத்தியோகத்தர்கள் , சுகாதார அமைச்சை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மருதானை டீன்ஸ் வீதியில், சுகாதார அமைச்சுக்கு முன்னால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. 30 ஆண்டுகள் சேவைக் காலத்தை நிறைவு செய்யும் குடும்பநல சுகாதர சேவை உத்தியோகத்தர்களை, விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதைக் கைவிடுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

## எரிபொருள் வழங்குமாறு கோரி இருவேறிடங்களில் போராட்டம்

கொழும்பு, ஏப்.2

எரிபொருள் வழங்குமாறு கோரி மக்கள் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் நேற்று இருவேறிடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா பேருந்து தரிப்பிடத்துக்கு முன்பாக, தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நுவரெலியா -கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்துத் தடைப்பட்டது. இதே வேளை, கொழும்பு புத்தளம் வீதிப் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

மதுரங்குளி நகரில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் போக்குவரத்துத் தடைப் பட்டது.

(ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதினம் தெரியுமோ?

எப்பவும் வால்பிடிச்சுக் கொண்டு திரியிறவைக்கு எண்டைக்கோ ஒருநாள் மூக்கறுபடுறது வழமைதான். அப்பிடித்தான் நேற்று ஒராளுக்கு நடந்திருக்கு. ஆள் ஆரெண்டு உங்களுக்கு நல்லாத் தெரியும். ஏற்கனவே தன்னை ஆவா குரூப் ஆளெண்டு பப்ளிக்கா ரீவியில பேட்டி குடுத்த குடுகேஸ் தான் அவர். இப்பிடி பப்ளிக்கா தானொரு வாள்வெட்டுக்காரன் எண்டு சொன்ன பிறகும் அவர் மேல பொலிஸ் ஒரு சுண்டுவிரலைக்கூட வைக்கேலை. அப்பிடியெண்டா என்ன அர்த்தம்? அவையின்ர ஆசியோடதான் உந்தக் குடுகேஸ் இயங்கிக் கொண்டிருக்குது.

தமிழர் பக்கத்துக்கு நியாயத்தை இல்லாமல் செய்யிறதுக்காகவே, மேலிடத்து ஆக்கள் இப்பிடியான குடுகேஸ்களுக்கு காசை அள்ளிக் குடுப்பினம். இதுகளும் வாங்கின காசுக்கு வஞ்சகம் செய்யாமல் ஊளையிடுங்கள். அப்பிடித்தான் கன இடங்களில பேரணி, ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் எண்டு கொழும்பில இருந்து கூலிக்கு இறக்கின கும்பலோட நிண்டு இந்தக் குடுகேஸ் கூப்பாடு போட்டது. 'புலிகளால கடத்தப்பட்ட சிப்பாய்களுக்கு நீதி வேணும்' எண்டு இல்லாத புலிகளிட்ட நீதிகேட்ட பெருமை இந்தக் குடுகேஸுக்கு இருக்கு. முதலில கனவுக்கார எம்.பியோட நிண்டிட்டு இப்ப வீணையின்ர பக்கமா இந்தக் குடுகேஸ் சாய்ஞ்சிட்டுது. புலிகளுக்கு எதிரான சில வெளிநாட்டு தமிழ் ஆக்கள் இந்தக் குடுகேஸை பெரும் அறிவுஜீவியாக நினைச்சு, கிளப் ஹவுஸில கண்டபடி புகழ் மாலையெல்லாம் பாடிச்சினம். ஆனால் பிறகு அவைக்கே இந்தக் குடுகேஸ் ஆப்பு வைக்க, அவை கப்சிப்.

இப்பிடியெல்லாம் கேடுகெட்ட வேலை செய்யிற இந்தக் குடுகேஸை தட்டிக்கேட்ட ஒரே காரணத்துக்காக யூரியூப் நடத்தின ரண்டு பேர் உள்ளுக்க போட்டினம். ஒரு வருசமாகியும் இன்னும் அவையை விட்டபாடில்லை. அப்பிடி மேலிடத்தில குடுகேஸுக்கு கடும்பவர். அந்தப் பவர் இருக்கிற ஆணவத்தில கண்டபடி ஆடிக்கொண்டிருந்தார். ஆனால் ஆணவத்தில ஆடினால் அது நிலைக்காது. எல்லா இடத்திலையும் வாயை வைச்சு பிழைக்கவும் ஏலாது. நேற்று யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்டில நடந்த ஆர்ப்பாட்டத்தில பழக்கதோசத்தில இந்தக் குடுகேஸ், குழப்பியடிச்சு கண்டபடி கதைக்கத் தொடங்கியிருக்கு. ஆனால் சனம் நிண்ட ஆவேசத்தில ஆளுக்கு கலைச்சுக் கலைச்சு செம அடி. செருப்பால கூட ஆளுக்கு அடியாம். அடி தாங்க ஏலாம தன்ர அல்லக்கை, நொள்ளைகையளோட ஆள் எடுத்த ஓட்டம் வீட்டை போய்ச் சேரும் வரை நிக்கேலையாம். சும்மா வாற காசை வாங்கினமாம் ஊளையிட்டமாம் எண்டு இருக்காமல் இப்பிடி ஆழம் தெரியாமல் வாயை விட்டால், வினைதானே வந்து சேரும்?



– பட்சி

Selladurai Krishna Kumar

தர்மம் ஒருநாள் தலையை நிமிர்த்தி
தலைவன் கதைகேட்கும்.




Jera Thampi

இதையும் சிங்கள ஆட்சியாளர்களிடம் சொல்லிவிடுங்கள்.

தமிழர்களிடம் ஒரு நம்பிக்கை இருக்கிறது. இறைவன் உள்ளான் என்பதே அது. அதாவது நமக்கு மேலான சக்தி ஒன்று உண்டு. அது அன்றே கொல்லாவிடினும் நின்று கொல்லும் என்பதே அந்த நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் ஒளிதனில்தான் நம் வாழ்க்கையும் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நம்பிக்கையை மரத்திலும் மலையிலும், கல்லிலும் சிறு புல்லிலும், நதியிலும் பெருஞ்சூரியனிலும், கடலிலும் வானிலும், வேலிலும் திரிசூலத்திலும், சிற்பத்திலும் தானாய் சிருஷ்டித்த தான் தோன்றியிலும் தமிழர்கள் காண்கின்றனர்.
இந்த நம்பிக்கைகள் மீது சிங்கள ஆட்சியாளர்களும், அவர்கள் இயக்கும் கட்டமைப்புக்களும் இடையறாத தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணமே இருக்கின்றனர். எங்கள் ஓர்மக் கருவிகளை தொடர்ச்சியாக அழித்துக்கொண்டேயிருக்கிறனர்.
வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஷ்வரர், குருந்தூர் மலை ஐயனார், நீராவியடிப் பிள்ளையார், தென்னவன்மரபடி கந்தனார் போன்ற தெய்வங்களை சிறைப்படுத்தியே விட்டீர்கள். எங்கள் நம்பிக்கைகளின் குறுக்கே வந்து நிற்கிறீர்கள். எங்கள் ஊர் பழசுகள் சொல்வதுபோல், தெய்வம் நின்றே கொல்லும். அப்படியொரு நின்று கொல்தலாகவே இக்காலத்தை அனேகர் உணர்கின்றனர்.
எனவே எங்கள் தெய்வங்களை திறந்துவிடுங்கள். அத்தெய்வங்களுக்கு நாம் சொரியும் பூக்களில் வரும் வசந்தம் உங்கள் கதவுகளையும் திறக்கும். தெய்வம் அருள்பாலிக்கும்.

வேல்விழி விஜயகுமார்



உங்களுக்குத் தெரியும் சகோதரி. கொல்வதற்காகவே தடையிடப்பட்டது. பால்மாவிலிருந்து பனடோல்வரை அத்தனையும் தடை. இரசாயன ஆயுதங்கள், இணைய துண்டிப்புகள் அத்தனையும் தப்பித்துவிடாதபடி கொத்துக்கொத்தாய் கொன்று விழுத்தியபோது வெற்றிக்களிப்பில் கெக்கட்டமிட்டீர்கள். நாங்கள் கத்தினோம் கதறினோம் "We have kids, we too have kids" ஓலமிட்டோம். வெற்றிநாயகரை துதிபாடிக்கொண்டே கிரிபத் ஆக்கி, வெடிகொளுத்தி மகிழ்ந்திருந்த சத்தத்தில் உங்களுக்கு அது கேட்கவேயில்லை.
இன்றும் அதே நாயகர்கள். அதே நாடு. அதே நீங்கள்.
ஆனால், உங்கள் கையில் "We too have kids..".
எங்களால் மகிழ்ந்திருக்க முடியவில்லை சகோதரி. நடப்பதெதுவும் தெரியாமல் உங்கள் கைகளே அணைப்பாக, தோள்களே அரணாக நள்ளிரவில் வீதிக்கு வரும் கைக்குழந்தையில் எங்கள் பிஞ்சுகளின் சாயல். வன்மத்தை துப்ப மனம் ஒப்பவில்லை. எல்லாம் சரியாகி தேறட்டுமென்றே ஏங்குகிறது தாய்மை. ஆனாலும் சகோதரி ஒன்றே ஒன்றை சொல்லியாகவேண்டும்
இதே குற்றவாளிகளால் கைகள், கால்கள் ஏன் அவர்கள் பெற்றோர்களைக் கூட இழந்த குழந்தைகள் எங்களிடம் உள்ளார்கள். ஆனாலும் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்.

Shalini Charles

இதுவே உங்கள் கடைசி
முட்டாள் தினமாகட்டும்.
விழித்துக்
கொள்ளுங்கள்.

Jegathees Krish

பத்தல, இன்னும்
நிறைய எதிர்பாக்குறம்,
நாங்க அனுபவிச்சதில
வெறும் 10% கூட இல்ல
இது. உங்களால
முடியும் Sir..

Vaamalosanah Loshan Ragupathy Balasridharan

Mirihana Protest !

கண்ணீர்ப்புகை ,
இணைய முடக்கம் !!
வடக்கு கிழக்கில்
காலாகாலமாக
பழக்கப்பட்டதை தங்கள்
ஊர் மக்களுக்கும்
பரிசளித்த நேரம்..
ஆனால் பொங்கியெழுந்த
மக்கள் நல்லதொரு ஆரம்பம்!

**இப் போராட்டத்தில்...**

R.j. Kiru

எந்த ஒரு அப்பாவி சிங்களவனும் இறந்துக்கூடாது இறைவா...
என்றே தான் தமிழரின் மனங்களில் தோன்றும் இருப்பினும் வெளிப்படுத்த முடியாத அளவுக்கு வெறுப்பு...
(இறப்பின் வலியை இழப்பின் வலியை நன்குணர்ந்தவன் தமிழன்)

**இன்னும் சில நாட்களில் இதைவிட பலமான சம்பவங்கள் நடந்தால் பல ஆன்மாக்கள் சாந்திபெறும்...**

**13 வருடங்களுக்கு முன்னர் நீங்கள் விழித்திருந்து செய்தி பார்த்தீர்கள் இன்று நாங்கள் விழித்திருந்து பார்க்கின்றோம்**

Gunaharan Sothilingam

"வடக்கில் ஏன் இன்னமும் எதிர்ப்புப் போராட்டங்கள் தொடங்கவில்லை?"
ஏனென்றால் எங்களவர்களுக்கு,

1. நெருக்கடிக்குள் வாழ்ந்த பழக்கமிருந்தது.
2. இன்னமும் வீடுகளில் தேங்காய், விறகு, கிணறு, காற்று இருக்கிறது
3. வெளிநாடுகளில் இருந்து உதவுகிறார்கள்

இவை எல்லாவற்றிக்கும் மேலாக

1. வெள்ளைவான் பயமிருக்கிறது
2. 4ம் மாடி கதைகள் தெரிந்திருக்கிறது
3. உறவுகள் காணாமலாக்கப்படுவதன் வலி தெரிந்திருக்கிறது
4. உணர்வுகள் இழப்பதன் வலி தெரிந்திருக்கிறது
5. அடுத்த தேர்தலிலும் இவர்களின் பயங்கரவாத ஒழிப்பு கோசங்கள் இருக்கும் என்பது தெரிந்திருக்கிறது.
6. நேராகவோ மறைவிலோ சிறிய வித்தியாசத்திலேயே ஆட்சியிழப்பார்கள் என்றும் தெரிகிறது.
7. இனிவரும் ஆட்சியாளர்களும் பெரிதாக என்னத்தை சாதிப்பார்கள் என்ற எண்ணமும் இருக்கிறது.
8. 2009 அழிவிற்கு பின்னரும் இலங்கை இன்னமும் Democratic Socialist Republic of Sri Lanka ஆகவே இருக்கிறது என்பதும் தெரிந்திருக்கிறது.




Mynthan Shiva

காலை கொழும்பிலிருந்து ஆர்ப்பாட்டத்திற்கு சென்ற ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். கொழும்பில் நேரம் 3.30 இருக்கும். அப்போதுதான் சம்பவ இடத்திலிருந்து வீட்டிற்கு வந்திருந்தார். ஓவர்டைம் ஆட்டோ ஓடுறப்போ கூட இவ்ளோ லேட்டா வீட்டுக்கு வந்ததில்லைனு சொன்னார். எரிப்புகள், ஊடரங்கு பற்றியெல்லாம் பேசிவிட்டு, 'இவனுக பண்ற நாதாரித்தனத்துக்கு எதுவும் செய்யமுடியலைன்னாலும், ஒரு கல் சரி எறிஞ்சிட்டு வருவோம்'னு போனேன் என்றார்.படத்தைப் பார்க்கும்போது அதே மனநிலையில்தான் பலரும் இருக்கிறார்கள் போல் தெரிகிறது. இந்தத் தீ பரவிடாமல் அப்படியே மடைமாற்றவோ அடக்கவோ ஏதேனும் குறுக்குவழியில் அரசு யோசிக்கலாம். ஆட்சிக் கதிரையைப் பிடிக்க வந்த ஈஸ்டர் மன்னர்களாச்சே! ஊரடங்குகளையும் தாண்டி அடுத்த மக்கள் போராட்டம், ஆட்சி மீதான மக்களின் வெறுப்பையும் துன்பத்தையும் செய்தியாக உலகத்திற்கு உரக்கச்சொல்லவேண்டும்

No Caption Needed









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை அதிகரிப்பால் நுகர்வு பெரும் வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 2

**உணவுப் பொருள்களுக்கான விலை அதிகரித்தமையை அடுத்து உணவுகளை நுகர்வோரின் எண்ணிக்கை 50 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

மின்சாரத் துண்டிப்பும் இந்த விடயத்தில் தாக்கம் செலுத்தியுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

இதேவேளை- அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய 600 கொள்கலன்கள் தொடர்ந்தும் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரிசி, சீனி மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுகளே இவ்வாறு தேங்கியுள்ளதாக அந்தச் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

பருப்பு மற்றும் சீனி என்பவற்றின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை- விலை அதிகரிக்கப்பட்டபோதிலும் சந்தையில் பால்மாவுக்கான தட்டுப்பாடு தொடர்கின்றது. வெளிநாட்டுக் கையிருப்பு இன்மையால் இவ்வாறு தொடர்ந்தும் பால்மாவுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக பால்மா இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-இ)



# உ/த பரீட்சை ஓகஸ்ட் மாதம்

கொழும்பு, ஏப். 2

இந்த ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையை (ஏ.எல்.) ஓகஸ்ட் மாதத்திலேயே நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை- ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துக்கான மருத்துவ பீடமொன்றை இவ்வருடம் திறக்க அரசு தீர்மானித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-இ)

# தேயிலைத் தொழிற்சாலைகளும் மின்தடையால் முடங்குகின்றன

கொழும்பு, ஏப். 2

டீசல் தட்டுப்பாடு காரணமாக பல தேயிலைத் தொழிற்சாலைகளின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் காலப் பகுதியில் மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தி தொழிற்சாலை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்ட போதிலும் டீசல் இன்மையால் மிகப் பெரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக தோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இடைக்கிடையே பல மணி நேரங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படுவதன் காரணமாக டீசல் இல்லாத நிலையில் அரைக்கும் இயந்திரங்களின் செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்படுவதாக தொழிற்சாலை முகாமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ-இ)

# கருத்து வெளியீட்டுக்கு கோத்தா கட்டுப்பாடு

கொழும்பு, ஏப். 2

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில், கருத்திடுதல் தடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு முதல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதைய நெருக்கடியையடுத்து, ஜனாதிபதி உள்ளிட்ட அரசின் நடவடிக்கைகளே அதற்கு காரணமென பரவலாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது.

சமூக ஊடகங்களிலும் அந்தக் கருத்து எதிரொலித்து வருகிறது. இந்த நிலையில், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ முகநூலில் பிறர் கருத்திடுவது தடுக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)



# அத்துமீறிய மீன்பிடி மூன்று பேர் கைது!

## காரைநகர் கடற்பரப்பில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 2

காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் 30, 35 மற்றும் 57 வயதுடையவர்கள். அவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய படகு கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் விசாரணைகளுக்காக மயிலிட்டி கடற்படை முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். (ம-27)

# மொழி அழிந்தால் ஓர் இனம் தானாகவே அழிந்துவிடும்!

## குருத்துவக் கல்லூரித் தமிழ் விழாவில் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் உரை

மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளம். உலக வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பிப் பார்த்தால் ஓர் உண்மை எமக்குத் தெளிவாகும். அதாவது ஓர் இனத்தை அழிக்கவேண்டும் என்றால் எதிரிகள் முதலில் அந்த இனத்தில் மொழியை அழித்திருக்கின்றார்கள். மொழி அழிந்தால் ஓர் இனம் தானாகவே அழிந்துவிடும். இவ்வாறு தெரிவித்தார் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்.

கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர்குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தமிழ்விழாவின்போது முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது தமிழ் விழா. தமிழராகிய நாம் தமிழுக்கு எடுக்கும் விழா. இது பெற்ற தாயை சேய்களுக்கு அறிமுகப்படுத்தும் விழா. பேசும் மொழியை நாவுக்கு அறிமுகப்படுத்தும் விழா. தமிழை தமிழனுக்கு அறிமுகப்படுத்தும் விழா. இது போன்ற விழாக்கள் மூலமாகத்தான் நாம் தமிழின் சிறப்பை உணரமுடியும். மொழி என்பது வெறும் ஒலி [illegible] மட்டுமல்ல. மொழியைப்பற்றிப் பேசுகின்றபோது, 'மொழி என்பது எண்ணங்களை எடுத்துச் செல்லும் ஊடகம்தானே' என்று சிலர் சாதாரணமாகச் சொல்லலாம். ஆனால் மொழி யின் பரிமாணங்கள் பரந்துபட்டது.

மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளம். மொழி இல்லையேல் ஓர் இனம் இல்லை. மொழி இல்லையேல் ஓர் இனத்தின் இலக்கியங்கள் இல்லை, கலைகள் இல்லை, பண்பாடு இல்லை, மரபுகள் இல்லை, சமயங்கள் இல்லை. ஓர் இனத்தின் இலக்கியங்களை, கலைகளை, பண்பாடுகளை, சமய நம்பிக்கைகளைத் தாங்கி நிற்பது மொழி. உலக வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பிப்பார்த்தால் ஓர் உண்மை நமக்குத் தெளிவாகும். அதாவது ஓர் இனத்தை அழிக்க வேண்டும் என்றால் எதிரிகள் முதலில் அந்த இனத்தில் மொழியை அழித்திருக்கின்றார்கள். மொழி அழிந்தால் ஓர் இனம் தானாகவே அழிந்துவிடும். மொழி என்பது ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு தன் பண்பாட்டை எடுத்துச் செல்லும் வழி. தமிழர்களாகிய நம்மைப் பொறுத்தவரை தமிழ் மொழி என்பது வெறும் 'வழி' மட்டுமல்ல, அதுதான் நமது 'விழி'. ஏனென்றால் இரண்டாயிரம் ஆண்டு கால தமிழின் எழுச்சி, வீழ்ச்சி - தமிழின் வெளிச்சம், இருட்டு - தமிழின் மேடு, பள்ளம் இவற்றை உற்றுப்பார்த்தால் ஓர் உண்மை புலப்படும். அதாவது தமிழனின் மொழிக்கு ஊறு நேர்ந்தபோதெல்லாம் அவனது அரசியல், பொருளாதார, பண்பாட்டின் அடித்தளங்கள் ஆட்டம்கண்டிருப்பதைப் பார்க்கின்றோம்.



தமிழர்களாகிய நாம் எமது பழம்பெருமை பேசியே காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கின்றோம். இன்று எனது சூழல், எனது வாழ்க்கை நிலையில் இருந்துகொண்டு எனது மொழியை, எனது பண்பாட்டை வளர்க்க, மேம்படுத்த நான் என்ன செய்ய முடியும் என்று நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

தமிழ் உலகின் மூத்த மொழி மட்டுமல்ல, முதல் செம்மொழியும் ஆகும். நம் தாயாக, நம் தெய்வமாக, நம் வழியாக, நம் விழியாக, நம் உயிராக மூச்சாக இருக்கின்ற தமிழை வளர்ப்போம், வாழவைப்போம் என்று நாமெல்லோரும் உறுதி பூணுவோம் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி, ஏப்.2

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தென்மராட்சியில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2022ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப்போட்டிகள் பிரதேச விளையாட்டு அலகால் நடத்தப்படவுள்ளது.

இதுவரை பதிவு மற்றும் மீள்பதிவை மேற்கொள்ளாத விளையாட்டுக்கழகங்கள் பிரதேச விளையாட்டு அலுவலரிடம் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பதிவை மேற்கொள்ளாத கழகங்கள் போட்டிகளில் பங்குபற்ற முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

★ ★ ★ ★

பளை, ஏப்.2

பச்சிலைப்பள்ளிப் பிரதேச பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான உள்ளக விளையாட்டுப் போட்டிகள் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுகின்றன.

கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற கரம் போட்டியில் முதலிடத்தை ஆண்கள் பிரிவில் இந்திராபுரம் விளையாட்டுக்கழகமும் பெண்கள் பிரிவில் பளை நகரம் ஸ்ரீபதி விளையாட்டுக் கழகமும் நடப்பு வருட சம்பியனாகின.

இரண்டாமிடத்தை ஆண்கள் பிரிவில் சோரன்பற்று பராசக்தி விளையாட்டுக்கழகமும் பெண்கள் பிரிவில் அரசர்கேணி புதிய இளந்தளிர் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.





கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற சதுரங்கப் போட்டியில் ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் இந்திராபுரம் விளையாட்டுக் கழக அணி முதலிடத்தைப் பெற்று நடப்பு வருட சம்பியனாகியது. இரண்டாமிடத்தை ஆண்கள் பிரிவில் சோரன்பற்று பராசக்தி அணியும் பெண்கள் பிரிவில் அரசர்கேணி புதிய இளந்தளிர் அணியும் பெற்றுக்கொண்டன. (ச-9)

★ ★ ★ ★

பளை, ஏப்.2

பச்சிலைப்பள்ளிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான 2022 ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டிகள் இன்று 02ஆம் திகதி மற்றும் நாளை 03ஆம் திகதி ஆகிய தினங்களில் பளை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகளின் உடற்தகைமைப் பரிசோதனைகள் பிரதேச விளையாட்டு அலகினரால் விளையாட்டுக்கழக ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன. (ச-9)

# றோ அதிகாரியின் மருமகளே பஸில் ராஜபக்சவின் மகள்!

## அவிழ்த்துவிட்ட வீரவன்ஸ



**கொழும்பு, ஏப். 2**

**இலங்கையில் இந்தியாவின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கே, இலங்கை கேட்கும்போதெல்லாம் இந்தியா கடன் வழங்குவதாக தெரிவித்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ, லிற்றோ நிறுவனத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு முயற்சிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.**

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தொடர்பில் எமக்குத் தெரிந்த விடயங்களை நாம் அம்பலப்படுத்தினால் நாடு பற்றியெறியுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், இந்தியாவுக்குச் சென்றுவிட்டு நாடு திரும்பிய நிதிஅமைச்சர் பஸில் ராஜபக்சவிடம் ஊடகவியலாளர்கள் எதிர்காலத்தில் என்ன நடக்குமென வினவினார்கள். இதற்கு சிரித்தபடியே அதிகமாக சிந்திக்க வேண்டாமென பஸில் கூறினார். அதாவது அதிகமாக நாட்டு மக்கள் சிந்திக்க ஆரம்பித்தால் பஸிலை இங்கிருக்கவிட மாட்டார்கள் என்பதாலேயே பஸில் அவ்வாறு கூறினார்.

பஸிலின் பதவியைப் பறிப்பதால் மாத்திரம் நாட்டை நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீட்க முடியாது. பஸில் என்கிற பல்லை பிடுங்குவதால் மாத்திரம் வாய் சுத்தமாகாது.

இதேவேளை பஸில் ராஜபக்சவின் இரு மகள்களில் ஒருவர் இந்தியப் பிரஜையை யும், மற்றொருவர் பிரிட்டன் பிரஜையையும் திருமணம் முடித்துள்ளனர்.

இந்தியாவில் திருமணம் முடித்துள்ள பஸிலின் மகளின் மாமனார் றோ உளவு அமைப்பின் அதிகாரி .இலங்கை கேட்கும் போதெல்லாம் கடன்களை இலங்கைக்கு வாரி வழங்குவதற்கு இந்தியாவுக்குப் பைத்தியமா? இலங்கையில் நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய தேவைகள் இந்தியாவுக்கு இருக்காதா?

லிற்றோ நிறுவனத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது - எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-இ)



## சேதனப் பசளை நிலையத்துக்கு கழிவகற்றும் தொட்டிகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

கல்லுண்டாய் வெளியில் அமைக்கப்பட்டுள்ள சேதனப் பசளை உற்பத்தி நிலையத்துக்கு, மானிப்பாய் பிரதேச சபையால் திண்மக்கழிவகற்றும் தொட்டிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. இதன்போது மானிப்பாய் பிரதேச சபையின் மானிப்பாய் கிழக்கு ஜே/138 கிராம அலுவலர் பிரிவிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் வட்டார ரீதியாக திண்மக்கழிவகற்றும் தொட்டிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமையும் பிரதேசசபையின் கழிவகற்றும் வாகனம் மூலம் குறித்த கழிவுகள் திரட்டப்படவுள்ளன.

மேலும் ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-125)

## பதவி நீக்கப்பட்ட பின் நிம்மதியாக உள்ளேன்!

### கூறுகிறார் சுசில்



கொழும்பு, ஏப். 2


இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னரே, தான் நிம்மதியாக இருப்பதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஒரு அரசியல்வாதியில்லை என்பதால், பிரச்சினைகள் ஏற்படும் போது கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு அவர் இடமளிப்பதில்லை. முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா, மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன ஆகியோரைவிட தற்போதைய ஜனாதிபதி வித்தியாசமானவர். இதனைத் தெரிந்துகொண்டே நாட்டு மக்கள் அவருக்கு வாக்களித்தனர்.

எனினும் பிரச்சினை ஒன்றுக்கு தீர்வை வழங்கும்போது அந்தத் தீர்வே பாரதூரமான பிரச்சினையாகி விடும்.

நான் என்ற வசனங்களை ஜனாதிபதி பயன்படுத்துகிறார். நான் செய்யவில்லை. பிரச்சினைகளுக்கு நான் காரணமில்லை. பிரச்சினைகளை நான் உருவாக்கவில்லை என்றே கூறுகிறார். உண்மையில் நான் என்பதற்குப் பதிலாக அவர் நாம் என்றே பயன்படுத்துவது பொருத்தமானது எனவும் தெரிவித்தார். (ஒ-இ)

## ஜனாதிபதி மாளிகை, நாடாளுமன்றுக்கு 24 மணி நேரமும் மின்விநியோகம்



கொழும்பு, ஏப். 2

ஜனாதிபதி மாளிகை மற்றும் நாடாளுமன்றுக்கு தொடர்ச்சியாக மின்சாரம் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தநிலையில் சுதந்திர வர்த்தக வலயங்கள், மின்சார நிலையங்களை அண்டிய பகுதிகள், கைத்தொழில் பேட்டைகள் உள்ளிட்ட நாட்டின் 191 இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் இந்த 191 இடங்களுக்கு மின்சாரத் தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"உன்னை நீ மன்னிப்பதைப் போல் மற்றவர்களையும் நீ மன்னித்து விடு" – ஜான்சன்

## அப்போது நாங்கள் இப்போது நீங்கள்!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் மிரிஹான இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் அதனை 'அடிப்படைவாதம்' என்று குறிப்பிட்டது. அரச தரப்பின் ஊடக சந்திப்பில் அமைச்சர் திலும் அமுனுகம, 'இது தீவிரவாதச் செயற்பாடாகும். எனவே, பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ்கூட நடவடிக்கை எடுக்கப்படலாம்' என்று தெரிவித்துள்ளார்.

ராஜபக்சக்களுக்கு எதிரான மக்கள் போராட்டத்துக்கு பயங்கரவாதம் என்று முத்திரை குத்தப்பட்டுள்ளது. மக்களின் நீதியான போராட்டங்களை 'பயங்கரவாதம்' என்ற ஒற்றைச் சொல்லுக்குள் முடக்கி, அடக்கி, ஒடுக்குவதற்கு அதிகாரத் தரப்பு முயல்கின்றது.

கடந்த காலங்களில் இந்தத் தீவின் எண்ணிக்கையில் சிறுபான்மையினராகிய தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காக அஹிம்சை வழியில், ஜனநாயகப் போராட்டங்களை ஆளும் அதிகார வர்க்கத்துக்கு எதிராக முன்னெடுத்திருந்தனர். அதனை 'பயங்கரவாதம்' எனச் சித்திரித்து சிங்கள தேசம். ஆளும் அதிகார வர்க்கத்தின் இனவாத வெறிக்குள் சிங்கள மக்களும் மூழ்கினர். தமிழர் போராட்டத்தை ஒடுக்கி நசுக்குவதற்கு கட்டுமட்டற்ற அதிகாரத்தை ஆட்சிப் பீடத்துக்கு சிங்களவர்கள் அள்ளி வழங்கினர். விளைவு, இந்த நாடு குருதியைக் கொப்பளித்து அழிந்தது.

2009ஆம் ஆண்டு வரையில் 'பயங்கரவாதம்' என்ற சொல்லின் கோர முகத்தை தமிழ் மக்கள் நேரடியாக அனுபவித்தார்கள். 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுடன், இந்த நாட்டின் மற்றோர் சிறுபான்மை சமூகமாகிய முஸ்லிம்களும் 'பயங்கரவாதம்' என்பதன் அகோரத்தை அனுபவித்தார்கள். ஆனால் அப்போதெல்லாம் கூடிக் குதூகலித்த சிங்கள தேசமும் அதன் புதல்வர்களும் இனித்தான் 'பயங்கரவாதம்' என்ற சொல்லின் வலியை உணரப் போகின்றார்கள்.

இதுவரை காலமும் எண்ணிக்கையில் சிறுபான்மையினராகிய தமிழர்களும், முஸ்லிம்களும் 'பயங்கரவாதம்' என்ற அரசின் முத்திரையால் வதைபடும்போது, ஆட்சியாளர்களைத் தூக்கிக் கொண்டாடிய சிங்களவர்கள், அதன் பெறுபேறுகளை உணரப் போகின்றார்கள். வகைதொகையின்றி சிங்கள மக்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகும் நிலைமை நெருங்கி விட்டது. மிரிஹானவில் ஆர்ப்பாட்டத்தின்போது கைதான 54 பேரையும் இதேசட்டத்தின் கீழ் உள்ளே தள்ள அரசாங்கம் முனைப்புக் காட்டுகின்றது. இதைத்தான் தியாகி திலீபன் மூன்று தசாப்தங்களுக்கு முன்னரே 'பயங்கரவாதத் தடைச்சட்டம் சிறுபான்மையினர் மீது மட்டுமல்ல ஒருகாலத்தின் சிங்கள மக்கள் மீதும் பாயும்' என்ற சாரப்பட எச்சரித்திருந்தார்.

ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் தமக்கு எதிராக கிளர்ந்தெழும் எவரையுமே பயங்கரவாதியாகவும், போராட்டங்களை பயங்கரவாதப் போராட்டமாகவும் சித்திரித்து, எதிர்ப்பாளர்களின் குரல்களை அடக்குவார்கள். கடந்த காலங்களில் இந்த நாட்டின் சிறுபான்மைச் சமூகங்களுக்கு நடந்ததும் அதுதான்.

பயங்கரவாதம் என்ற சொல், ஆட்சியாளர்களின் இருப்பைத் தக்கவைக்கும் கவசச்சொல் என்பதை சிங்கள மக்கள் இனியாவது புரிந்துகொள்ளவேண்டும். அந்தச் சொல்லால், நியாயமான போராட்டங்கள் எப்படியெல்லாம் நசுக்கப்பட்டன என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். காலம் இப்போது அவர்களுக்கு அந்தத் தெளிவை வழங்குமாக இருந்தால், தமிழர்களின் உரிமைக்கான போராட்டமும் அங்கீகரிக்கப்படும். தமிழர்களுக்கான தேசமும் பிறக்கும். இலங்கையும் நிம்மதியாக இருக்கும்.




# ரெலோ தனிவழி செல்வதே எம்மில் பலருக்கு விருப்பம்

## கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

**வவுனியா, ஏப். 2**

**ரெலோ தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் இருந்து வெளியேறினால் சந்தோசமாக இருக்கும். எமது கட்சியில் பலருக்கு நீண்ட கால எதிர்பார்ப்பே இவர்கள் எப்போது போவார்கள் என்பதுதான் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

"கடந்த காலங்களில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு தமிழ் அரசுக்கட்சியை விமர்சித்து பின்னர் வெளியேறியது. அதேபோன்றதான நிலையில் தற்போது ரெலோ காணப்படுகின்றது. எனவே ரெலோவும் வெளியேறிவிடும் என்ற அச்சம் உங்களுக்கு உள்ளதா?" என்று வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், அவர்கள் வெளியேறிவிடுவர்கள் என்று ஏன் அச்சமாக இருக்கவேண்டும். அது சந்தோசமாகவும் இருக்கலாம்தானே. நாங்கள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளில் பிளவு இருக்க கூடாது. எல்லோரும் சேர்ந்து இயங்குவது எமது மக்களுக்கு பலமான விடயம் என்பதனால் எல்லோருடனும் சேர்ந்து பயணிக்கின்றோம்.

இன்று அரசுடன் தமிழ் தரப்பு பேச்சு நடத்தும் சூழ்நிலையில் ரெலோ மட்டுமல்ல வெளியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ், விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியாகட்டும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாகட்டும் எல்லோரும் இதற்கு இணங்கி ஒன்றாக சேர்ந்து நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டை அரசாங்கத்துக்கு முன்வைக்க வேண்டும் - என்றார். (ஒ-110)

# விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து கூட்டமைப்பை உருவாக்கியதே நாம்

வவுனியா, ஏப். 2

விடுதலைப் புலிகளின் ஆசீர்வாதத்துடன் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை உருவாக்கியவர்கள் நாமே. புலிகளை வன்முறையாளர்கள் போல காட்டிக் கொள்ளும் சுமந்திரன், கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் தகுதியுள்ளதா என்று கேள்வியெழுப்பியுள்ளார் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கூட்டமைப்பிலிருந்து ரெலோ விலகிச் சென்றால் தமிழ் அரசு கட்சி சந்தோசப்படும் என சுமந்திரன் தெரிவித்திருந்தார். கூட்டமைப்பு உருவாகி, 10 வருடங்களின் பின்னரே சுமந்திரன் கட்சிக்குள் வந்தார். கூட்டமைப்பின் உருவாக்கத்தில் ரெலோ முக்கிய பங்காற்றியிருந்தது. சுமந்திரன் வன்முறையாளர் எனக் குறிப்பிடும் வே.பிரபாகரனின் ஆசீர்வாதத்துடனேயே கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த கூட்டமைப்பில் சுமந்திரன் எப்படி அங்கம் வகிக்க முடியும்?

சுமந்திரன் பல தடவைகள் சீண்டியபோதும், நாம் உருவாக்கிய கூட்டமைப்பின் ஒற்றுமை பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக மௌனம் சாதித்தோம். இப்பொழுது சுமந்திரன் சொன்ன கருத்து பாரதூரமானது. அதற்கு பதிலடி கொடுப்போம் - என்றார். (ஒ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்

## ஆங்கிலப் பேராசா

# அமரர் கந்தையா சின்னத்

### ஈழத்து புலமை அடையாளம் மொழிஞாயிறு K.C சிவசுப்பிரமணியம் Sir

"மாணவர்களே பல்கலைக்கழக பட்டப்படிப்பை கற்கின்ற அதே தருணத்திலே ஆங்கிலப் பேராசான் சிவசுப்பிரமணியம் அவர்களிடம் ஆங்கில மொழியைக்கற்று மேற்படிப்பு படிக்கின்றளவுக்கு உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள் என்று வினயமாக கேட்டுக்கொள்கிறேன்" இது சாதாரணமான ஒருவரின் அறிவுரையல்ல. சர்வதேச ரீதியில் அறியப்பட்ட யாழ். பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் அவர்களின் பதவியேற்பு கன்னியுரையின் சில வரிகள். இத்துணை சிறப்புமிக்க ஈழத்தின் புலமை அடையாளமே எங்கள் பேராசான் க.சி.சிவசுப்பிரமணியம் அவர்கள். அவரை பலருக்கும் ஒரு ஆங்கிலக் கல்விமானாகவே தெரியும். ஆனால் அவர் ஆங்கிலத்தில் மட்டுமல்லாது தமிழிலும் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர் என்பதும் உண்மை.

புலமை ஒலி இடையறாது ஒலிக்கும் புலோலியின் தென்பகுதியில் சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதியரின் ஏக புத்திரனாக பிறந்த அன்னார். அறிஞர் கந்தமுருகேசனார். தந்தையார் சின்னத்தம்பி மற்றும் சகோதரியான ஆங்கில ஆசிரியையான நாகம்மா ஆகியோரின் வழிகாட்டலினால் தமிழ். ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் மொழிசார்ந்த பல்வேறு இலக்கண. இலக்கியங்களையும் சிறுவயதிலே கற்றுத் தேர்ந்தார்.

சிறு பராயத்தில் தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரின் குருகுலக் கல்வியில் அதிகப்படியான நேரத்தை ஒதுக்கிய அன்னார் தனது 13 ஆவது வயதிலேயே பல்வேறு சமர கவிகளை பாடியுள்ளார்:, தனது 14 ஆவது வயதிலே பால பண்டிதர் ஆனார். அதே சமயத்தில் அவர் ஆங்கில மொழி பயில்வதிலும் தீவிர ஆர்வம் செலுத்த தொடங்கினார். பின்னர் யாழ்ப்பாண கல்லூரியிலே ஆங்கிலம். லத்தீன், பிரெஞ்சு ஆகிய மூன்று மொழிகளிலும் தோற்றி London Institute இல் கலைமாணி பட்டதாரியானார்.

தனது 17 ஆவது வயதில் இருந்து ஆங்கிலக் கல்வியை முழு நேரமாக போதிக்க தொடங்கிய அன்னார் ஆறு தசாப்தங்களாக பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் ஆங்கில பசிக்கு விருந்தளித்தார். ஆங்கில இலக்கணத்தையும் தமிழ் இலக்கணத்தையும் மிகத் துல்லியமாக தெரிந்துவைத்திருந்ததன் காரணமாக இரண்டு மொழிகளையும் மிகச் சரியான முறையில் தொடர்பு படுத்தி ஆங்கிலக் கல்வியை கற்பிக்கும் திறன் யாழ்ப்பாணத்தில் இவர் ஒருவருக்கே இருந்தது என்றால் அது மிகையாகாது.

இலக்கணம். இலக்கியம். சொற்கட்டுக்கள் மற்றும் பேச்சு மொழி என்று விதம் விதமாக ஆங்கிலத்தின் சுவையை மாணவர்களுக்கு திறம்பட புகட்டினார். எல்லோரும் சிந்திக்கும் நிலையின் அடுத்தடுத்த நிலைகளில் மாணவர்களை சிந்திக்க வைத்தார். புலோலி. வடமராட்சி. யாழ்ப்பாணம். வன்னி. மட்டக்களப்பு மற்றும் சென்னை லயோலா கல்லூரி என பரந்து விரிந்த அன்னாரது கற்பித்தல் பணி உலக அரங்கில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பல்துறை விற்பன்னர்கள் பலரையும் அவர் புகழை பேசவைத்தது.

நாமெல்லாரும் பார்த்து வியக்கின்ற அறிஞர்கள். வல்லுனர்கள் பலரும் பார்த்து வியந்த அன்னாரின் அரும்பெரும் பணியினை அன்னாரது ஓராண்டு நினைவில் மனதிருத்தி அவர் வழியினைப் போற்றி உயர்வடைவோமாக.

**தென்புலோலியூர்,**
**பரா. ரதீஸ், பரா. றமேஸ்**

### எனது சிந்தனையில் மிதந்த சில விடயங்கள்

அமரர் சி. சிவசுப்பிரமணியம் Sir என்னுடன் சிறுவயது முதல் தோழமை உணர்வுடன் தான் பழகினார். இனிய எளிய அன்பு தான் Sir என்று எனது இதயம் கண்டு கொண்டது. அந்த அன்பின் சக்தியில் எது நடந்தாலும் அதில் வியப்பதற்கோ, விலக்குவதற்கோ, விபரிப்பதற்கோ எதுவும் இருந்திருக்கவில்லை.

எனது பாக்கியம் என்னை அறியாமலே இயல்பாக அவரிடம் அன்பு கொள்ளவைத்தது. இதுவரை எவருக்கும் இடையே இருந்திராத ஒரு அன்புறவுக்கு நாங்கள் இருவரும் பாத்திரமாக இருந்தோம். இளமை நாட்களில் இருவரும் பருத்தித்துறை சென்றல் தியேட்டரில் படம் பார்த்தோம். மாலை சந்தி, புற்றளைப் பிள்ளையார், மூத்தவிநாயகர் கோவில்களில் திருவிழாக் காலங்களில் மேளக்கச்சேரிகள் பார்த்து மகிழ்ந்தோம்.

தூய அன்பு தென்றல் வீசிட அவர் ஒரு நாள் சொன்னார் "யார் என்னைப் பார்க்க வராவிட்டாலும் நீ வந்தால் போதும். அன்றைய பொழுது சந்தோசமாக போகும்" என்பார். உனக்கும் எனக்கும் பூர்வஜென்ம உறவு ஒன்று இருக்கிறது போலும். நானும் நீயும் அண்ணன் தம்பியாகத்தான் இருந்திருக்கிறோம் போல என்பார். தினமும் தம்பசிட்டியில் இருந்து என்னைப் பார்க்க வருகிறாய். எனது தனிமையை நீ தான் போக்கினாய். தனிமை என்னை வாட்டி எடுத்த போதெல்லாம் என்னுடன் நீ உடனிருந்தாய் இந்தப் பாசமும் பரிவும் வேறுயாரிடமும் நான் பார்த்ததில்லை. என்று அன்போடு சொல்லுவார் நான் போட்டு வாறேன் Sir என்றதும் இப்போ போகத்தான் வேண்டுமா? என்று கேட்டு விட்டு சில நிமி-

இப்போ போகத்தான் வேண்டுமா? என்று கேட்டு விட்டு சில நிமிடங்கள் தன்னுடன் இருக்கும் படி கேட்பார்.

அந்த இடையில் பல சுவாரசியமான விடயங்களை சொல்லுவார். சைவசமய விழுமியங்களை பற்றி சொல்வார். மகாபாரதம் பற்றித் தெளிவுபடுத்துவார். கம்பராமாயணம் பற்றிய கருத்துக்களை சொல்லுவார். சேக்ஸ்பியரின் நாடகங்களை சுவைபடச் சொல்லுவார். நிறைவாக கண்ணதாசனின் கவிதை வரிகளை நினைவுபடுத்தி. காலத்தால் அழியாத பாடல்களை சொல்லுவார்.

அவரது முகம் புனிதமானது எப்பொழுதுமே கருணை நிறைந்ததாகவே இருக்கும். என்னை சரியாகவே மதிப்பிட்டு எனது ஆளுமையை புரிந்து கொண்டது மட்டுமல்லாமல் இறுதி வரை அந்த உறவைப் பேணித் தொடர்ச்சியாக வைத்திருந்தார். அந்த உறவு அவரின் இறுதிவரை நீடித்தது.

அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்

**அன்புடன்**
**தம்பி மூர்த்தி (புண்ணியமூர்த்தி)**

### தென் புலோரியூர் ஆங்கிலப் பேராசான்...

கந்தமுருகேசனாரின் வழியில் நின்று குருகுலம் கல்வி மூலம் புலோலி. மண்ணில் ஆரம்பித்த கல்விப்பணி புலோலி வடமராட்சி. யாழ் குடாநாடு. வன்னி எனப் பரந்து இந்தியா சென்று லயோலா கல்லூரி வரை விரிந்து சென்ற அமரர் அவர்கள் சமூகத்திற்காக பல கல்வியாளர்களை உருவாக்கியுள்ளார். அத்துடன் அவரிடம் கற்ற மாணவர்கள் ஊடாக பல உதவிகளை தனக்காக அல்லாமல் பிறருக்காகப் பெற்று அவர்களை மகிழ வைத்துள்ளார் அரசியல் மேடைகளில் சிறந்த அரசியல் வாதியாக முன்வைப்புக்களை நிகழ்த்தியுள்ளார். சமூக உறவு முறைகளில் ஏற்றத் தாழ்வுகள் பாராது. அன்பாக ஒருவரை பல தடவை அழைத்து. அன்புமனைவியை சிவா என அழைத்து உபசாரங்கள் விருந்தோம்பல்கள் செய்து மகிழ்வார்.

அன்னிய மொழியில் புலமை பெற்றவராக இருந்தும் தாய் மொழியாம் தமிழ் மொழியை உயிராக சாதித்த அன்பு ஆசானின் ஓராண்டு நிறைவு நாளில் நினைவு கூர சந்தர்ப்பம் தந்த மகள் டாக்டர் பிரியதர்சினிக்கும் எனது நன்றிகள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**K.V.N சிவலிங்கம்**
**(ஆசிரியர்)**

### ஆங்கில அமுத மலரொன்று உதிர்ந்து ஆண்டொன்று கழிந்ததே!

புலோலி எனும் புலமைச்சோலை தனில்
பூத்து மணம் பரப்பிய ஆங்கில
அமுத மலரொன்று உதிர்ந்து
ஆண்டொன்று கழிந்ததே!
அமுதம் பருகிய வண்டுகளே
ஆறாத்துயரில் ஆழ்ந்து
உதிர்ந்த இடம் தனை மறவாது
உலகெலாம் பறந்து திரிந்தனவே
அன்பெனும் பாசக்கயிற்றால் பிணைக்கும்
பன்மொழிப் புலமையுடன் கூடிய
ஆங்கில அகராதி ஒன்று நடமாடியதே
செம்மொழியாம் தமிழை உலகமொழியாம்
ஆங்கிலத்துடன் உவந்தே குழைத்து
இனிய அமுதமாய் அன்பு கலந்தே
தேடி வந்தோர்க்கெல்லாம் வாரி வழங்கி மகிழ்ந்ததே!
நாடிய போதெல்லாம் அரிய அறிவுரை ஈந்தே
வாடிய வதனம் செழிக்கக் கண்டு மகிழ்ந்ததே
இன்றோ அவ் அமுத மலரொன்று திரும்ப
என்றேனும் கிடைக்காதோ என ஏங்கித்தவிக்கின்றோமே!

**திரு.தி. குகநாதன் (அதிபர்)**
**யா/ புற்றளை மகா வித்தியாலயம்.**

### என் பாசமிகு அண்ணா!

இரத்தத்தால் வந்த உறவே அன்றி - நீ
இடையில் வந்த உறவல்ல
பாதியிலே பிரிந்தாலும் என்
பாசமது என்றும் மறையாது அண்ணா
தங்கச்சி வா என்று அழைப்பது போல ஒரு பிரமை
எல்லோர்க்கும் என் தங்கை ஒரே ரத்தம்
என்று சொல்லும் அந்த வார்த்தை
என் துன்பம், கஷ்டங்கள் சொல்லும் போது
நான் இருக்கின்றேன் கவலைப்படாதே
என்று சொல்லும் அந்த ஆறுதல் வார்த்தை
என்றும் மறக்க முடியாது அண்ணா

**பாசத் தங்கை**



**தோற்றம்**
**08.02.1944**

**திதி : 02.0**

புன்னகைத்த முகத்தோடு புதையலென ஞானம்
புதுமையதை தினம்தேடும் பல்நோக்குப் பார்வை
தன்னகத்து வருவோரை தன் அகத்துள் வைத்து
தக்கபடி மொழி பாய்ச்சும் தெய்வீகக் கூர்மை
இன்னலென எய்துபவர் இதயத்துள் சென்று
இருளகற்றி ஒளியேற்றும் தினகரப் போர்வை
மன்னுலகம் உள்ளவரை நின்புகழும் வாழும்
மறைந்தாண்டு போனாலும் மறையாவுன் நேர்மை

ஓம் சாந்தி! ஓம் சா

### மாமாவிற்கு ஓர் ஆத்ம சமர்ப்பணம்...

மறைந்தும் மறையாது நம் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் ஆங்கிலக் கல்விப் பேரதிபதியான மாமா மறைந்து ஓராண்டின் நிறைவில் நினைவு கூர்ந்து அவரின் ஆங்கில இல்லத்துக்குள் செல்லும் போது அவரது சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் கம்பீரப் பேரழகை காணமுடியவில்லை என்பது வேதனையாக இருக்கிறது. மூத்த புதல்வியின் சிறுவயது மறைவால் துயருற்றிருந்தார். இந்த நேரத்தில் இருதய சுகவீனத்தால் மறைந்த யோகா அக்காவையும் நினைவு கூருகின்றேன். நல்ல துணைவியோடு தனது இனிய மகளை இருதய சிகிச்சை நிபுணராக்கி சிறப்பான வாழ்வை அமைத்துக் கொடுத்தார். அவருடைய முகப் பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டு நினைவஞ்சலி

## ன் - மொழி ஞாயிறு

# ந்தம்பி சிவசுப்பிரமணியம்



மறைவு
13.04.2021

2.04.2022

ம் | எங்களுக்குள் எல்லாமே ஆகி
வ | எமை அவையில் முந்த வைத்து
து | தங்கப் புருடனாய் தந்தையாய்
தரணி புகழ் ஆசானாய்
ஓங்கு திறனுடை உத்தமரே
ஓராண்டோ நீர் மறைந்து
நீங்கா நினைவோடு நித்தியமாய்
ரமை | நின் நினைவில் வாழ்கிறோம்.

சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

பார்ப்போரை வியக்கவைக்கும் அளவுக்கு இருந்தது. துறைசார் வல்லுனர்கள் நிபுணர்களுக்கு கல்வி கொடுத்த பெருவள்ளல், இந்த மண்ணின் சக்தி வாய்ந்தவருக்கு ஆங்கில கல்வி கற்பித்த பெருமையும் புகழும் சிறப்பும் மாமாவுக்கு உண்டு. அவரை மதித்த பற்றாளர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தேவைகளை பூர்த்தி செய்யும் தகுதி நிலையினை உருவாக்கிய பெருமனசு நிறந்தவர். எல்லோருக்கும் ஆங்கிலக் கல்வியை வாரி வழங்கிய மறைந்த மாமாவின் ஓராண்டில் அவரை வணங்கி ஆத்மா சாந்தியடைய இறைவனை மனதார பிரார்த்திப்போமாக.

அன்பு மருமகன் சூரியகுமாரன்
Veluppillai Family

### எம் அன்பிற்குரிய ஆசானுக்கு முதலாம் ஆண்டு நினைவேந்தல் நாளிது

அவரது ஆசிரிய வித்துவத்தை தாண்டி அவரது மொழிப்புலமை பரந்த அறிவு ஆகியவற்றையும் கடந்து பேராசானிடம் வியந்த ஒரு விடயம் அவர் நெருங்கியவர்களிடம் காட்டிய தூய்மையான அளவு கடந்த அன்பும் அக்கறையும் ஆகும். இவர் எங்களுக்கு நீண்ட கால குடும்ப நண்பராக அடைந்தது நாம் என்றும் வாழ்வில் அமைந்த வரப்பிரசாதமாகக் கருதுகின்றோம்.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் எனபதற்கிணங்க, அவர் அவரைச் சார்ந்தோருக்கு வழங்கும் அவருக்கே உரித்தான தனித்துவமான உபசரிப்புக்களும் உண்மையான மனப்பூர்வமான செயல் வடிவிலான கவனிப்புக்களும் என்றும் மனதை நெருடத்தவறியதில்லை. அன்பையும் உதவிகளையும் தக்கோருக்கு கொடுப்பதால் நிறைவுகாணும் மனிதரவர். ஓராண்டு கடந்தநிலையிலும் ஆசானின் இழப்பு ஏற்றுக் கொள்ளவதற்கு கடினமான ஒன்றாக அமைந்திருக்கிறது அவரது அன்பு நினைவுகளும் அவர் எம்மேல் காட்டிய கிடைத்தற்கரிய அன்பும் எங்கள் மனக்கிடங்குகளில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும். அவர் வழங்கிய ஆத்மார்த்தமான உதவிகள் அனைத்திற்கும் எங்கள் குடும்பத்தினர் அனைவரும் என்றும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அசைக்கமுடியாத இந்த ஆளுமைமனிதர், தான் பெற்ற வரப்பிரசாதங்களைக் கொண்டு தான்சார்ந்த சமுகத்திற்கு சிறந்த வழிகாட்டியாய் தன் ஒளி கொண்டு தன்னைச் சார்ந்தோர் பலரை நெறிப்படுத்தி வழி அமைத்துக் கொடுத்த பெரும் சொத்தாய் திகழ்ந்திருக்கிறார். அவரதும் இந்த வாழ்தலை என்றும் வாழ்த்தி நிற்பதோடு அவரது ஆன்மா இறையருகில் இளைப்பாற வேண்டி நிற்கின்றோம்.

திரு.திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா, குடும்பத்தினர்

### எம் ஆசானின் நீங்கா நினைவுகள்...

அன்பின் ஆங்கில ஆசானே! | அழியாத ஓவியமே!
ஆண்டுகள் ஒன்று ஆனாலும் | கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் | எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்.
மண்விட்டுச் சென்ற நீங்கள் | விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல் | கனகாலம் இருப்பீர்கள்
ஆங்கில ஆசானே!
ஆண்டுகள் கடப்பினும் | ஆங்கில ஆசான் உங்கள்
அடியொற்றி நடக்கின்றோம் | புலோலியூர் தந்த பெரும்
புகழே விருட்சமே!
இந்நாளில் நீள நினைந்து உங்களை நெக் குருகி நிற்கின்றோம்.

Dr.S.ஜெயரட்ணம், குடும்பத்தினர்

### A Tribute to Our Distinguished English Lecturer Late Mr. K.C. Sivasubramaniam

It is incumbent on me to express our gratitude and respect to our Guru K.C Sivasubramaniam.

It is a stark truth that ther was a noble man sent by the omniscient Being and his name was Sivasubramaniam. Having taught thousands of students for more than six decades, he maintained an unblemished record of teaching. Everyone who knows him will agree with me that his proficiency in english was unbeatable

What is uppermost in my mind is his great service. Several students including me have bean benefitted immeasurably by his teaching. It is my great previlege to say that I was one of the student who studied under him till to the end of his days.

The days I got along with him will be ever green in my memories. I bow my head and pray for his eternal rest.

S.S. Narayanan B.Sc (Hons), PGDE

Dear Sir,

This is Singarajah, Your disciple I firmly believe that I am one of those students who have benefitted a great deal, having studied under you. I have met so many people pertaining to my field under the sun but I have never ever come across a person of calibre and capacity like you in my life. Albeit the fact that I was born under impoverished circumstances, I have studied under the best teachers in my place and have garnered the wealth of knowledge. No one matches the linguistic skills and competency of yours including the world knowledge.

I belong to your field and I am highly anxious about what and what I am going to achieve in my life, with so many intellectuals like you having set a mile stone in my field and being my Guru

With love Kamban (M. Gunasingarajah
BA in Linguistics and English
English Language Teaching
3rd Year Students and TKT Cambridge

### சிவசுப்பிரமணியம் சேர் ஓர் புலமைச் சொத்து

அமரர் சி.சிவசுப்பிரமணியம் சேர் சிவபதமடைந்து இன்றுடன் வருடம் நிறைவு பெறுகின்றது. சிறந்த ஆளுமையும், கவர்ச்சியான உரையாடலும், சொல்லாற்றலும், ஆங்கிலம், இலத்தீன் பிரெஞ்சு [illegible] கொண்ட தனித்துவமிக்க ஓர் அசாதாரண ஆளுமை தான் சிவசுப்பிரமணியம் சேர். நல்லாசியராக, சிறந்த சமூக சேவையாளராக, மற்றவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக வாழ்ந்து தனக்கென ஒரு நற்பெயரையும் இடத்தினையும் பதித்து பல மாணவர்களை உருவாக்கிய புலமையாளர்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் ஈரடிகளுக்கு பொருள் கொடுத்தவர் எனது குரு சிவசுப்பிரமணியம் சேர். அமரர் சிவசுப்பிரமணியம் எங்களின் புலமைச்சொத்து. அச்சொத்து பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்டு கொண்டிருக்கும்.

அன்புடன்
பேராசிரியர் சி. விஜயகுமார்.

### ஆங்கிலச் சமுத்திரம் அடங்கியது

ஆங்கிலப் பேராசானின் வகுப்பறையை முதன்முதலாக பார்த்த போது "கரும்பலகையும் வெண்கட்டியும் இல்லாத படிப்பும் ஒரு படிப்போ" என்றுதான் நினைத்தேன். அடுத்ததாக "இவரிடம் ஏன் படிக்க வந்தேனோ" என்றும் நினைத்தேன். பரீட்சையமற்ற ஆங்கில வார்த்தைகளும், சொல்லச் சொல்ல குறிப்பெடுப்பதும் ஆரம்பத்தில் கடினமாக இருந்தன எனலாம். ஆனால் பழக்கத்திற்கு வந்தபிறகு அவையொன்றும் பெரிய விடயங்களாக எனக்கு இருக்கவில்லை. ஆங்கிலக் கல்வியை மேலும் மேலும் கற்க வேண்டுமென்று விரும்பி பல ஆண்டுகளாக அவரது இறுதிக் காலம் வரையும் கூட ஆசானிடம் கல்வி பயின்ற மாணவன் என்று சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்கள் ஆவதற்கும், பல பட்டங்களை பின் சேர்த்துக்கொள்வதற்கும் போட்டி போடும் இந்த உலகத்தில் அதை விரும்பாதவராக எமது ஆசான் இருந்தார். மற்றவர்களின் ஆதிக்கத்தை விரும்பாது தனது பாணியில் தான் சுயமாக கற்பிப் பதையே தான் விரும்பியதாக பலமுறை அவர் சொல்லியதை நான் இங்கு நினைவுகூர்கிறேன்.

ஒரு துறையில் நிபுணத்துவம் உடையவரை கடல் என்று சொல்வார்கள். இது எமது ஆங்கிலப் பேராசானுக்கு பொருந்தாது. "இவரை ஆங்கிலச் சமுத்திரம்" என்றுதான் அழைக்கவேண்டும். ஒரு தமிழன் ஆங்கிலத்தில் இவ்வளவு நிபுணத்துவமுடையவராக இருந்துள்ளார் என்பதை நினைத்து எமது தமிழினம் பெருமைப் பட்டுக்கொள்ளலாம். எமது பேராசான் இவ்வுலகை நீத்து ஓராண்டு ஓடி மறைந்தாலும் அவரின் நினைவுகள் இன்றும் பசுமையாக எம் மனங்களில் நிறைந்திருக்கின்றன. இந்நாளில் எமது ஆசானின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ந. ஜெயசீலன் BA (Hons) ஆசிரியர்
கிளி /பூநகரி மத்திய கல்லூரி.

### நானும் ஓர் மகள்

என்றும் எம் மனங்களில் நீங்காத நினைவுகளாய் வலம் வந்து கொண்டு இருக்கும் ஆங்கில ஆசிரியர் சிவசுப்பிரமணியம் சேர் அவர்கள் ஒரு ஆசிரியர் என்ற நிலைக்கு அப்பால் தன்னிடம் கல்வி கற்க வரும் மாணவர்கள் ஒவ்வொருவரினதும் நெருங்கிய உறவினர் என்ற வட்டத்துக்குள் தான் வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு மாணவரதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை அறிந்து தன்னால் முடிந்த உதவிகளை செய்வார். தனிப்பட்ட ரீதியில் என்னுடைய அனைத்து விடயங்களையும் கேட்டறிந்து எதிர்கால வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பவர் எப்பொழுதும் வகுப்பறைக்கு செல்லும் போது Good morning Sir சொன்னதும் குரலை வைத்து கண்டறிந்து "என் விசுவாசமான அன்பு மகளே வா" என்று அன்பாக அழைத்து எப்பொழுதும் உன்னுடன் நான் இருப்பேன் எதற்கும் பயப்படாதே என்று கூறுவார். இப்போதும் அந்த வாசலை தாண்டும் போதெல்லாம் என் "அன்பு மகள் என்று" சேர் கூறுவது காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. நிறைந்த அன்பாலும் பண்பாலும் பசுமையான நினைவுகளோடு இன்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்.

அன்பு மாணவி
சுஜீவா ஸ்ரீகாந்தா

### அன்பு பேராசான் K.C சிவசுப்பிரமணியம்

யாழ் வடமராட்சியில் புலோலி என்னும் கிராமத்தில் ஒளி விளக்காக தோன்றிய இவர், தனது ஆங்கில அறிவொளியை தமிழ் மக்கள் மீது பரப்பினார். இவரிடம் ஆங்கிலம் கற்ற மாணவர்கள் உலகில் எல்லாப் பாகங்களிலும் வாழ்வில் சிறந்து விளங்குகின்றார்கள்.

இவரிடத்தில் நானும் சில ஆண்டுகள் கல்விகற்றது என் முற்பிறப்பில் நான் செய்த புண்ணியம் ஆகவே கருதுகிறேன். சாதாரணமான நிலையில் ஆங்கிலம் படிக்க இவரிடம் சென்ற நான் சில வருடங்களில் எனது ஆங்கிலப்புலமையை பெரிய அளவில் வளர்த்துக் கொண்டேன். இறுதி நாட்களில் உடல் நிலை குன்றிய நிலையிலும் படுத்திருந்தபடியே எனக்கு கல்வி புகட்டியதை நினைக்கும் போது கண்களில் கண்ணீர் சொரிகின்றது.

தினமும் Speech, Oral, Grammer, Vocabulary என்பவற்றை தனக்குரிய பாணியில் படிப்பித்தார். எனது வாழ்க்கையின் தவிர்க்க முடியாத முக்கியமான நபராக எனது இதயத்தில் தினமும் தாங்கி நிற்கின்றேன். பேராசானின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மாணவன்
அ. ஜெயகிருஷ்ணா
(Public Health Inspector)

(CS 18231) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறங்காவலர் தின நிகழ்வு

கிளிநொச்சி, ஏப். 2

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் தர்மகர்த்தா கார்த்திகேசு சின்னத்தம்பியின் 14 ஆவது நினைவையொட்டி அறங்காவலர் தின நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு கோவில் ஷரன்ஜா நினைவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கார்த்திகேசு சின்னத்தம்பி அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வில், நினைவுப் பேருரையை யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் துரைராசா இளங்குமரன் நிகழ்த்துவார். அத்துடன் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை மருத்துவர் பவானி விநாசித்தம்பி கலந்துகொள்வார். (ஒ-14,9)

## ஓம் அமைப்பால் நவக்கிரக யாகம்

யாழ்ப்பாணம், ஏப். 2

ஓம் அமைப்பின் ஏற்பாட்டில் நவக்கிரக யாகம் இன்று காலை 8 மணிக்கு வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான வளாகத்தில் உள்ள சிங்கார வேலவன் சிவகாமத்திரி அம்பாள் சந்நிதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

குறித்த யாகத்தில் கலந்துகொள்ளும் அடியார்களை பால் மற்றும் சிவத்திரவியங்கள் ஆகியவற்றை எடுத்து வந்து தமது கரங்களால் அபிஷேகம் செய்யுமாறு ஓம் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14)

## புதுமுக மாணவர்களுக்கான இசைவாக்க நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 2

கொக்குவில் இந்துக்கல்லூரியில் தரம் 6 வகுப்புக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களை கல்லூரிக் கலாசாரத்துடன் இசைவுபடுத்தும் "மகிழ்ச்சிகரமான பாடசாலைச் சூழல் இசைவாக்கம்" என்ற நிகழ்ச்சித்திட்டம் இன்று காலை 7.30 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த நிகழ்ச்சித்திட்டத்துக்கான அனுசரணையை கனடாவில் வசிக்கும் ரகு தேவராஜா, சுகன்யா தேவராஜா குடும்பத்தினர் வழங்குவர். நிகழ்ச்சியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஒ-14)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் மனித வள முகாமைத்துவம், கணினி அடிப்படைக்கல்வி ஆகிய குறுகிய கால கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என்று யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ.14)

# இலங்கையில் பல்வேறு துறைகளுக்கு 3 நாடுகள் ஒத்துழைப்பு



கொழும்பு, ஏப்.2

இலங்கையில் வலுசக்தி, சுற்றுலா, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளை மேம்படுத்துவதற்கு பிரிட்டன், தென்கொரியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வுள்ளன.

ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனின் நாடாளுமன்ற பிரபுக்கள் சபையின் உறுப்பினர் லோர்ட் மைகல் நெஸ்பி, சூரிய சக்தி மற்றும் பிற புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களை மின் உற்பத்தியில் இணைப்பதற்கு பிரிட்டனின் ஒத்துழைப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

தென்கொரியாவில் இலங்கைக்கு அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவது தொடர்பில், தமது அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது என்று அரச கொள்கை ஒருங்கிணைப்பு அமைச்சர் கோ யூன் சோல் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

விசேட சுற்றுலா வலயங்களை அமைப்பதன் மூலம் எகிப்திய சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை இலங்கை ஈர்க்க முடியும் என்று இலங்கைக்கான எகிப்திய தூதுவர் மகேட் மொஸ்லே ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் மற்றும் ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ-4,இ)

# எரிசக்தி அமைச்சருக்கு எதிராக மனுத்தாக்கல்!

**கொழும்பு, ஏப். 2**

**மின் உற்பத்திக்கு போதுமான எரிபொருளை தொடர்ந்து வழங்குமாறு எரிசக்தி அமைச்சருக்கு உத்தரவிடுமாறுகோரி பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுத்தாக்கல் செய்துள்ளது.**

நிதி அமைச்சு, மின்சக்தி அமைச்சு, நாணயச் சபை, மத்திய வங்கியின் ஆளுநர், மின்சார சபை ஆகியோருக்கு எதிராகவே இந்த அடிப்படை உரிமை மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக கடந்த 2016ஆம் ஆண்டுமுதல் பல்வேறு தரப்பினருக்கும் பல்வேறு கடிதங்களை அனுப்பிய போதிலும் எந்தக் காத்திரமான நடவடிக்கையும் எந்தவொரு திணைக்களத்தாலும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம)

**விற்பனைக்கு**

லயன் பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

T.P: 077 172 1074

**K.P திருமண சேவை**

எம்மிடம் சகல ஜாதி மதத்தினருக்குமான மணமகன் மணமகள் ஜாதகம் உண்டு. தேவையானோர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு:-

(CS 19168) (1/6) 077 005 0344

# தமிழரசுக் கட்சியினர் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 2

தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் பொருளாளரின் அழைப்பின் பேரில், தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் இன்று காலை 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, நாளை ஞாயிற்றுக்கிழமை தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளைக்கூட்டம் கட்சியின் தலைமையகத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம)

# மாதகல் கடலில் வைத்து கஞ்சாவுடன் மூவர் கைது

## புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 2

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தினை சேர்ந்த இருவர் உள்ளிட்ட மூவர் யாழ்ப்பாணம் மாதகல் கடற்பரப்பில் வைத்து கேரளக் கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், கோவிலன் கலங்கரை விளக்கத்துக்கு வடக்கே உள்ள கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் 66 கிலோ 600 கிராம் கேரள கஞ்சாவுடன் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-19)

**ஓராண்டு நினைவஞ்சலி அழைப்பு**



கடந்த ஆண்டு சித்திரை மாதம் பதின்மூன்றாம் திகதி இறைபதம் அடைந்த

**அமரர் திரு.க.பாலச்சந்திரன்**

(முன்னாள் மக்கள் வங்கி ஓய்வூதியர்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நாளை ஞாயிற்றுக்கிழமை சித்திரை மாதம் மூன்றாம் திகதி (03.04.2022 : ஆங்கில வருடம்) அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்றைய தினம் தாங்கள் தம் குடும்ப சகிதம் வருகை தந்து நினைவஞ்சலி பிரார்த்தனையிலும் மதிய போசனையிலும் கலந்து கொள்ளுமாறும் அன்னாரின் குடும்பத்தின் சார்பில் அழைக்கின்றோம்.

(cs.43915) (2.6) அமரர் க.பாலச்சந்திரன் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்டை நுழைவாயில் கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, ஏப். 2

கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள் இரட்டை நுழைவாயில்களின் கும்பாபிஷேகம் நாளை முற்பகல் 9.10 முதல் 10.40 வரை இடம்பெறவுள்ளது.

ஆலயப் பிரதமகுரு குருமணி சிவஸ்ரீ இ.புஸ்பராசா குருக்கள் தலைமையில் இடம்பெறும் கும்பாபிஷேகத்தில் அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஒ-14,159)

## மாணவர்களுக்கு பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி, ஏப். 2

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் காணப்படும் 60 பாடசாலை மாணவர்களுக்கு ஓவியப் பயிற்சிப்பட்டறை, ஓவியக் கண்காட்சி ஆகிய நிகழ்வுகள் நாளை மற்றும் நாளைமறுதினம் கிளிநொச்சி வடக்கு முருகானந்தாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய அமெரிக்கா நியூ ஜெர்சியில் இயங்கி வரும் கல்வி புத்தாக்கம், தலைமைத்துவம், சமூகசேவை அமைப்பின் அனுசரணையில் புலம்பெயர் வாழ் நண்பர்களின் உதவியுடன் குறித்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

ஓவியர் டிஷாந்தினி, ஓவியர் தயாளினி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் சிவனருள்ராஜா கலந்து கொள்வார். (ஒ-14)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் பொருளியல்துறைத் தலைவரும் பேராசானுமாகிய அமரர் நல்லதம்பி பேரின்பநாதனின் அஞ்சலி நிகழ்வு பேராசிரியர் கா.குகபாலன் தலைமையில் இன்று 2ஆம் திகதி காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு வடஇலங்கை சர்வோதய வளாகத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## பொதுப்பணிக்கு தகுதி தடையல்ல

இவன் எப்ப முளைச்சவன்? இவனுக்கு என்ன தெரியும்? இவையின்ரை பரம்பரையை எங்களுக்குத் தெரியாதா? என்ற நையாண்டிக் கேள்விகளை அடுக்கும் இடம்தான் சொந்த ஊர் என்ற வரையறையை ஒரு நூலில் படித்த ஞாபகம். இவன் தச்சனின் மகனல்லவா? நசரேத்தூரை சேர்ந்தவனல்லா? இவனது சகோதரர் நம்மிடையே உள்ளார்களல்லவா? இவனுக்கு எங்கிருந்து ஞானம் வந்தது? இது இயேசுவை நோக்கி யூதர்களின் அவமதிப்பு.

இயேசுவின் மக்கள் மயப்பட்ட போதனைகளும் மனிதாபிமான செயற்பாடுகளும் அதிகார வர்க்கத்துக்கு வேப்பிலையாகக் கசந்தது. ஏழைகளை ஒதுக்கப்பட்டோரை புற இனத்தாரை, அரவணைத்த மனித நேயத்தை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தவறுகளைச் சுட்டிக்காட்டியதை ஏற்கமுடியவில்லை. தேர்ந்துகொள்ளப்பட்ட இனம் என்ற யூதர்களின் மமதையை முறியடித்ததை ஜீரணிக்க முடியவில்லை.

தவக்காலச் சிந்தனை

உண்மையை உரைப்பதற்கு நீதியை நிலைநாட்டுவதற்கு தகுதி தேவையில்லை.பொது நலப் பணிக்கு பட்டம், பதவி,படிப்பு,முக்கியமல்ல. நண்பனாக இருப்பதற்கு தகுதி தேவையில்லை.எதிரியாக இருப்பவனுக்குத்தான் தகுதி வேண்டும்.

கடவுளுடைய கொடைகளும் ஆசீரும் ஒருவனுடைய இனத்தைப்பார்த்தோ மொழியைப்பார்த்தோ அந்தஸ்தைப் பார்த்தோ, மதத்தைப் பார்த்தோ வழங்கப்படுவதில்லை. பரந்துபட்ட சிந்தனையையும் பாரபட்சமற்ற செயற்பாடுகளையும் தூய நோக்குப் பணிகளையும் பொறுத்தே பொழியப்படுகிறது. எனவே சமூக கறைகளைக் கழுவ மனித மாண்புகளை உயிர்ப்பிக்க பணியாற்றுவோரை தராதரம் பார்க்காது ஏற்றுக்கொண்டு முன்னேறுவோம். இதுவே இயேசுவின் சிலுவைப் பயணப் பாதை.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

## வெற்றுத் தாள்களில் கிறுக்கி விளையாடாதீர்



ராணி சீதரன்

பல கனவுகளோடு தனது குழந்தையைச் சுமந்து பெற்றெடுத்த தாய்க்கு, ஓட்டிசமுள்ள குழந்தை ஏமாற்றத்தையும், விரக்தியையும் ஏற்படுத்துவது இயல்பானதே. இந்த நிலைமை ஏற்படின் அந்தக் குழந்தையைப் பெற்றெடுத்த தாய் தன்னை தயார்ப்படுத்துவதற்கும், என் குழந்தை என ஏற்றுக் கொள்வதற்கும் முன்வர வேண்டும். சமூகம் சிரிக்கும். மற்றவர்கள் பழிப்பார்கள் எனப் பயந்து- கருதி ஒதுக்கி வைக்கக்கூடாது. ஓட்டிசமுள்ள குழந்தைகளை வினோதப் பொருளாகப் பார்க்காதீர்கள். சாதாரண பிள்ளைகளின் மூளை விருத்தியோடு ஒத்ததாக இவர்களது மூளை விருத்தி இருக்காது. எனவேதான் இவர்கள் விசேட தேவைக்குரியவர்களாகின்றனர்.

தாமதமான துலங்கல், உணர்வுகளை வெளிப்படுத்தத் தெரியாத பேச்சுக் குறைப்பாடு, சமூகப் பொருத்தப்பாடின்மை என்பவற்றை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு தொடர் பயிற்சியை வழங்கி, மாற்றங்களை அவதானிப்பதோடு தட்டிக்கொடுத்தல், பாராட்டுதல் என்பவற்றைப் பொறுமையோடு மேற்கொள்ளும் போது, இயல்பான நிலையில் அவர்கள் தமது செயற்பாடுகளில் ஈடுபடுவதை அவதானிக்கலாம்.



உலக ஓட்டிச தினம் இன்று

தாமதமான செயற்பாடுகளுக்கும், பொருத்தமற்ற நடத்தைகளுக்கும் தண்டிப்பதோ, திட்டுவதோ கூடாது. இது பிள்ளையை மேலும் ஆபத்தான நிலைக்கே கொண்டு செல்லும். 'ஓட்டிசம்' உள்ள பிள்ளைகளை பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப் பழகுவது அடிப்படையான அம்சமாகும்.

இது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும் கட்டாயம் இருக்க வேண்டும். இத்தகைய பிள்ளைகள் பாடசாலைகளில் பல இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். ஆசிரியர்கள் பொறுமை, கருணை, அர்ப்பணிப்பு என்பவற்றோடு இவர்களை அணுகவேண்டும்.

சாதனையாளர்களாக வரக்கூடிய அறிவுத்திறன் இவர்களிடம் இருக்கின்றது. படிக்கத் தகுதியில்லாதவர் என பள்ளிக்கூடத்தால் விரட்டப்பட்ட தோமஸ் அல்வா எடிசனை உலகம் போற்றும் விஞ்ஞானியாக மாற்றியவர் அவரது தாய். எனவே ஓட்டிசம் உள்ள பிள்ளைகளின் பெற்றோர் விழிப்புணர்வுடையவராகவும் பிள்ளையை ஏற்றுக்கொள்பவராகவும் தம்மை மாற்ற வேண்டும்.

"நீ உன்னைத் திருத்து சமூகம் தானாகத் திருந்தும்". பெற்றோரே வெற்றுத்தாள்களைப் போல் இருக்கும் உங்கள் பிள்ளைகளிடம் நீங்கள் கிறுக்கி விளையாடாதீர்கள். மற்றவர்களையும் அனுமதிக்காதீர்கள். உங்கள் விடாமுயற்சி உங்கள் பிள்ளைகளை ஓட்டிசத்திலிருந்து மீட்டெடுக்கும் என்பதில் ஐயமில்லை.



## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைத்து மகிழ்வீர்கள். சுபச்செலவுகள் ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. சுப நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**இடபம்:** உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். முதலீடு கூடும். பணியிடத்தில் நற்பெயர் எடுப்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். வரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் ஏற்படும்.

**மிதுனம்:** செலவுகளைக் குறைப்பீர்கள். நிம்மதியான நாள். உறவினர், நண்பர்களுக்கு கொடுத்த கடன் இன்று வசூலாகும் கலைத்துறையினருக்கு வருமானம் பெருகும்.

**கடகம்:** புதிய முதலீடுகளில் ஈடுபடுவது பற்றி யோசிப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். கலகலப்பான நாள். நண்பர்களால் நன்மை உண்டு. உற்சாகமாக நல்ல செயலை செய்வீர்கள்.

**சிம்மம்:** எது செய்தாலும் நன்கு யோசித்த பிறகே அதில் ஈடுபடுங்கள். குடும்பத்தினரிடம் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. எதிர்கால நன்மைக்கு வித்திடுவீர்கள். மகிழ்ச்சி கூடும் நாள்.

**கன்னி:** இன்று குடும்பத்தினருடன் ஏற்படும் நெருக்கம் மகிழ்ச்சி தரும். உடல் நலத்தில் கவனம் தேவை. ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடவும். கோபத்தைக் கட்டுப்படுத்தவும்.

**துலாம்:** சுபநிகழ்ச்சிகள் பற்றிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். எந்தவொரு முயற்சியிலும் சற்று தாமதம் உண்டாகும். கோபத்தைக் குறைப்பது நல்லது. எதுவும் நிதானமாக நடக்கும்.

**விருச்சிகம்:** வழக்குகள் தாமதமானாலும் அது வெற்றியை நோக்கிச் செல்லும். சிலரால் ஏற்பட்ட சிக்கல் நீங்கும். குதூகலமான நாள். முன்பிருந்த தடைகள் நீங்கும்.

**தனுசு:** எதிர்பாராத நிகழ்ச்சியில் பங்கு பெறுவீர்கள். நன்மை உண்டு. எதையும் தைரியத்துடன் எதிர்கொண்டு மேன்மை அடைவீர்கள். பணியிடத்தில் நன்மைகள் ஓரளவுக்கு சிறப்பாக இருக்கும்.

**மகரம்:** கடன் சற்றுக் குறையும். சோம்பலை உதறுவது நல்லது. ஆடம்பர செலவுகளைக் குறைத்து நன்மை காண்பீர்கள். கவலை தீரும். நண்பருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள்.

**கும்பம்:** தொழில், முதலீடு முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். பணியாளர்கள் கூடுதலாக உழைத்துப் பாராட்டுப் பெறுவீர்கள். பணியில் அதிக கவனம் செலுத்திப் பயன் அடைவீர்கள்.

**மீனம்:** பழைய பிரச்சினை தீர்ந்து குடும்பத்தில் நல்ல மாற்றம் ஏற்படும். பணவரவு சுமாராகவே இருக்கும். பொறுமை தேவை. வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 12 . 1938



மறைவு 30 . 03 . 2022

## நாகலிங்கம் விக்னராஜா

(ஓய்வுபெற்ற நிதிதரர் - கரைச்சிதெற்கு, பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்)

நவாலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 21 /4, வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விக்னராஜா கடந்த (30.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலட்சுமி (ஓய்வுபெற்ற உபதபாலதிபர் - இராமநாதபுரம்) அவர்களின் அன்பு கணவரும், சுமதி ஜெகன் மோகன், தேவகி உலகநாதன், வாசுகி புண்ணியமூர்த்தி, சங்கநிதி ரவிச்சந்திரன், பதுமநிதி நிக்ஸன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகன் மோகன், உலகநாதன், புண்ணியமூர்த்தி, ரவிச்சந்திரன், நிக்ஸன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியாவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 237 4674
077 739 4416

(cs.19143) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

**வாடகைக்கு**

வீடு, றூம் வாடகைக்கு உண்டு.
திருநெல்வேலி கலாசாலை.

076 998 0837

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் அரசடி வீதி, தட்டாதெரு சந்திக்கருகில் (Hindu College) 3 அறை வீடு வாடகைக்குண்டு.

077 310 9585

**வாடகைக்குண்டு**

யாழ்நகரில் 2 அறைகள், பெரிய ஹோல், குசினி, விறாந்தை, tiles தரை வீடு வாடகைக்குண்டு - வாடகை 20,000

அனெக்ஸ்: 1 Bedroom + kitchen, Hall, கட்டில் மெத்தை, மேசை, சிறிய பிரிட்ஜ், தனிமின் மானி, ரைல்ஸ் தரை வாடகை 10000

Call 074 243 2673

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 30 . 03 . 1950



மறைவு 03 . 03 . 2022

## அமரர் விசுவநாதர் நவரத்தினராசா

கண்ணிமைக்கும் பொழுதினிலே
கண் மறைந்து சென்றீர்
எண்ணமெல்லாம் உங்கள் நினைவால்
- வாடுகின்றோம்
விண்ணகத்தில் அமைதியுடன் - நீர்
வாழ்ந்திடவே வேண்டுகின்றோம்.

சிவன் கோவிலடி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

(cs.19135 (2.6)

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## மின்வெட்டு இன்று 8.30

மின்வெட்டு இன்று எட்டு மணித்தியாலம் 30 நிமிடங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக நாட்டில் 12 மணித்தியாலத்துக்கும் அதிகமான அளவு மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. கடந்த சில தினங்களுடன் ஒப்பிடுகையில் இன்று மின்வெட்டின் நேரஅளவு குறைக்கப்பட்டுள்ளது. (ம)

## விபத்தில் ஆசிரியர் இறப்பு!

பூநகரி பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஆசிரியர் ஒருவர் உயிரிழந்தார்.

கிளிநொச்சி பிரமந்தனாறு ம.வியில் தமிழ்பாட ஆசிரியராகப் பணியாற்றும் ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்தார். (ம)

# மரண அறிவித்தல்

## திருமதி சங்கரப்பிள்ளை (சக்கரை) சின்னம்மா



மண்ணில் 11.04.1927 விண்ணில் 31.03.2022

யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் வளாக ஒழுங்கை, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை சின்னம்மா கடந்த (31.03.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் பாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவி யும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற புஷ்பராணி, புலேந்திரன் (ஜேர்மனி), இளங்கோ (ஜேர்மனி), கருணாதேவி, புவீந்திரன் (ஜேர்மனி), பர்கானா, உதயசாந்தி (பிரான்ஸ்), சுமதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செல்வராசா, கோமதி (ஜேர்மனி), சுகந்தி (ஜேர்மனி), இராஜேஸ்வரன் (முன்னாள் கணக்காளர்), சுசீலாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜலீஸ் (ஆசிரியர்), சிவலோகநாதன் (பிரான்ஸ்), சிறி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயசிறி (நோர்வே), ஜெயதீஸ் (லண்டன்), பிரசன்னா (மெகாமாட்), காயத்திரி, கரிபக்ஷா (ஜேர்மனி), கரிகயானன் (ஜேர்மனி), கரியானுஜா (ஜேர்மனி), சாரங்கா (ஜேர்மனி), சுருதி (ஜேர்மனி), பிரியந்தினி, உதயகீதன், சக்தியாங்கனி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுஜீவன் (சுங்கத் திணைக்கள பரிசோதகர்), பார்க்கவி (ஜேர்மனி), பாரத் (ஜேர்மனி), Dr.யௌவ்சி (லண்டன்), யுஸ்வியா (ஆசிரியர்), ஜீசான் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஜம்மா, சுபாங்கன் (பிரான்ஸ்), Dr.கௌசிகன் (பிரான்ஸ்), ராகுல் (மருத்துவ பீட மாணவன்-லண்டன்), ரகுராம் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெனி, ரித்திக், சாஜன், நிசான், சகானா, ஆதேஷ், சாய்கரீஸ், நியாஸ், ஜவீன், மித்திரா, மயூரா, மீரா, பிறைடன், றொனிற், சாரிக்கா, ருத்ரா, ஷர்லீனா, ஷாய்ரா, லயா, ரக்கியான், ரயான், இமாத், ஜமன், ஆசியா, ஆரா, அனா, அர்வா, சக்ரா, லுக்மான் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்
071 8414 142
0049 1788016701
0049 15232078216
0049 17632307287

(CS 19170)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்று 2nd ஏப்ரல் சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு - குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானம்,நெல்லியடி
அனுமதிச்சீட்டுக்கள் - VIP, 1000/=, 500/=,300/= [300 ரூபா டிக்கெட் பெறுபவர்களுக்கு ஆசன வசதி இல்லை]
நாளை 3nd ஏப்ரல் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தந்தை செல்வா மண்டபம்
அனுமதிச்சீட்டுக்கள் - VIP, 1000/=. 500/= நுழைவுச்சீட்டுகளுக்கு - 0741837707

Main Sponsor
HARI ENGINEERING & CONTRACTORS (PVT) LTD
ENGINEERING
Alvai Road, Nelliyady, Jaffna.
Tel: 0212261400 / 0772830694

A7 ARRUL
அருள் ஜுவல்லரி
09, New Municipal Complex,
Kasthuriyar Road, Jaffna.
Tel: 0741837707

Arrul Global Express
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
10, மாநகரசபை புதிய கட்டிடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Tel:0212223536

V.S.P Gingelly Oil
Parimala Stores
26, A, Manipay Road,
Jaffna.
Tel: 0212224135
Tel: 0212229165

சமுத்திராமஹால் Banquet Hall
K.K.S Road, Maruthanar Madam,
Chunnakam, Jaffna.
Tel: 0212243536/ 0776529583

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
Tel: 0777225292

VEGILAND

IDMNC INTERNATIONAL

Press Partner | Hospitality Partner | Service Partner

Saravana Digital Print 0775631562
The Valampuri
Valampuri Hotel

Event Partner & Organizer
BSDW
Beauty sketch Dream World
Beauty Cosmetology institution & Mr & Mrs modeling Academy
+94771543899

The Phone Shop- Nelliyadi Tel: 0772850285
kajamugan Hardware Tel:02122228333
Rajan Cycle Works Tel:0775552973

டிக்கெட் கிடைக்கும் இடங்கள் கஸ்தூரியார் வீதி- Arul Jewellers (0741837707)
நெல்லியடி - The Phone Shop Tel: 0772850285
சுன்னாகம் - Ranjanas Tex Tel: 07777488201/0212240278
சாவகச்சேரி - V.M.K.Jewellers - Tel: 0773144756/ 0212270038
Arruls (Pvt) Ltd. (0741837707) (அனைத்துக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்)

K.T.Prasath Tel: 0774718969
Event Management - Ceylon Art Creation (CAC)

Ticket Hotline : 0741837707



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

இந்தியன் செலக்ஷனின்

ஆடைத் தெரிவுகள்

திருமண பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
புறொக்ஸ், வெஸ்ரேன் டொப்,
மொடர்ன் ரெஸ், சேட், ரீ சேட்,
ரவுஸர்கள்,
என ஏராளமான மனங்கவர்,
ஆடைத்தெரிவுகளோடு...



இம்முறை சித்திரைப் புத்தாண்டை
இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாட
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் : 19.03.2022 - 14.04.2022 வரை

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்


# மரண அறிவித்தல்

## இரத்தினம் காந்திமதி



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல, 23/2 5 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் கொண்ட இரத்தினம் காந்திமதி கடந்த (31.03.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - இளையம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இரத்தினத்தின் பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலர்வு 02.11.1946

உதிர்வு 31.03.2022

தகவல்:
குடும்பத்தினர்
021 222 5564

(cs.43900) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 10 . 1936



மறைவு
29 . 03 . 2022

## திருமதி கனகம்மா சிவகுருநாதன்

சரவணையைப் பிறப்பிடமாகவும், மணல்தறை ஒழுங்கை கந்தர்மடத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கனகம்மா சிவகுருநாதன் கடந்த (29.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - இளையபிள்ளை தம்பதியரின் அருமை புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவகுருநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கௌசல்யாதேவி, சசிதரன் (S.S.தரன் பான்சி), சறோஜாதேவி (France) வனஜாதேவி (ஆசிரியை- யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), கருணாதேவி (France), விஜயலட்சுமி (ஆசிரியை-யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தினி, காலஞ்சென்ற பத்மநாதன், கதிரவேல் (ஆசிரியர்-யா/முத்துதம்பி மகா வித்தியாலயம்), இராமச்சந்திரன் (France), தேவகுமாரன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் (முறைசாரா கல்வி) மாகாண கல்வி திணைக்களம், வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஜா- விஜிதரன், நிறோஜன், நீரஜா, நீரஜன் (France), துலாஞ்சன் (பொறியியல் பீட மாணவன், மொரட்டுவ), றொசானி - சுமன், நிஷானி, றணுஷா, துஷாந்தி, மிதுர்சியன், அக்ஷயா, விஷ்ணுகா, அபிஷேக் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஸ்ரிபன், சொபியா, சோந்திரா, சோனியா, சிமு, தேஷ்வின் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**56/5A, மணல்தறை ஒழுங்கை,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**077 908 2413**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 18988) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 04 . 1941



மறைவு
30 . 03 . 2022

## கார்த்திகேசு யோகநாதன்
### (ஆயுர்வேத வைத்தியர்)

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு யோகநாதன் கடந்த (30.03.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு காமாட்சி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற E.V. கார்த்திகேசு சுந்தரம் தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், அகிலா, அனுஜா, அருணா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ், சிவகுமார், யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வத்சன், மதுசன், சிவஜன், ம்துரிக்கா, அருசன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவகுருநாதனின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தவலட்சுமியின் மைத்துனனும், கார்த்திகா, அருட்பாவை ஆகியோரின் பெரியதந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சரோஜினிதேவி, விஜயலட்சுமி, மகலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனனும், சரோஜினி, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி சண்முகலிங்கம், இராமசந்திரன், ஆனந்தராசா ஆகியோரின் சகலரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**131/5, இராசாவின் தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

(cs 43914) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**074 078 5361**

# மரண அறிவித்தல்

## நன்னித்தம்பி தேவதாஸ்



தோற்றம்
21.01.1954

மறைவு
29.03.2022

ஆதிமயிலிட்டி கிராமகோட்டடியைப் பிறப்பிடமாகவும் இளவாலை பிரதான வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி தேவதாஸ் கடந்த (29.03.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை செல்வநாயகம் தம்பதியரின் மூத்த மருமகனும், நாகேஸ்வரியின் ஆருயிர் கணவரும், திவ்யா (லண்டன்), புருஷோத் (Bimputh Finace Jaffna), தனுஷா, கோகுலன் (முதலாம் வருட மாணவன் விலங்கியல் விஞ்ஞானம்-ஊவா பல்கலைக்கழகம்)ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தனின் மாமனாரும், சுதிவ், வர்னயா ஆகியோரின் அன்புப் பேரனும், சிவனேஸ்வரி, செல்வராணி, அமரர்.கிருஷ்ணமூர்த்தி, விநாயகமூர்த்தி (கனடா), அமரர்.விக்னேஸ்வரமூர்த்தி, அமரர் சிவமூர்த்தி, கிருபானி (கனடா), கிருபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமரர். விக்னேஸ்வரமூர்த்தி, விக்னேஸ்வரி, இராஜகுமாரி, சகுந்தேஸ்வரி, அமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இளவாலை பிரதான வீதி,**
**இளவாலை.**

(CS 19163) (4/6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 646 7361**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மிரஹான....

பயங்கரவாதத் தடைச்சட்டம் பயன்படுத்தப்படலாம் என்ற தொனியிலும் கருத்து வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே, அமைச்சர் திலும் அமுனுகம இவ்வாறு குறிப்பிட்டதுடன், போராட்டத்தை ஒடுக்க இராணுவம் களமிறக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மக்கள் போராட்டத்தை ஒடுக்குவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக ஜனாதிபதியின் வீட்டுக்குள் நுழைவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. பொலிஸாரின் வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன. அப்போதுகூட அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. எனினும், ஜனாதிபதியொருவர் வீட்டில் இருக்கும்போது, கலகம் ஏற்படுத்தும் நோக்கில் அவரின் வீடுக்குள் நுழைவதை அனுமதிக்க முடியாது. அதனையே குறைந்தபட்ச அதிகாரத்தை பயன்படுத்தி பொலிஸார் தடுத்துள்ளனர். தண்ணீர்த்தாரை பிரயோகமும், கண்ணீர்ப்புகைத் தாக்குதலுமே நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் தீவிரவாதச் செயற்பாடாகும். எனவே, பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ்கூட நடவடிக்கை எடுக்கலாம். 88 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் இப்படி பஸ்களை கொளுத்தினர், பொலிஸாரைத் தாக்கினர். அதனாலேயே 54 பேரையும் கைது செய்வதற்கு காரணம் இருந்திருக்கலாம். எனவே, எந்த சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பொலிஸார் தீர்மானிப்பார்கள். போராட்டம் இடம்பெற்ற இடத்தில் இராணுவத்தினர் இருந்தனர். எனினும், அவர்கள் களமிறக்கப்படவில்லை. விசேட அதிரடிப்படையினர் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டனர்' - என்றார். (அ-ம-44)

## கொழும்பில்...

**கொழும்பு**

ஜனாதிபதி கோத்தாபயவின் இல்லத்தை முற்றுகையிட்டு நேற்றுமுன்தினம் நள்ளிரவு மக்கள் பெரும் போராட்டத்திலும் வன்முறையிலும் ஈடுபட்ட நிலையில், நேற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் போராட்டங்கள் தீவிரத்தோடு வெடிக்கத் தொடங்கியுள்ளன. ஆரம்பத்தில் பல்கலைக் கழக மாணவர்கள் தீப்பந்தங்களுடன் போராட்டத்தில் களமிறங்கினர். இதையடுத்து பலநூறு பொதுமக்களும் தன்னெழுச்சியாக போராட்டத்தில் கலந்துகொண்டனர். நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும் எதையும் பொருட்படுத்தாமல் போராட்டங்கள் பல்வேறு இடங்களிலும் தன்னெழுச்சியுடன் தொடர்ந்தன.

'கோ ஹோம் கோத்தா' (வீட்டுக்குச் செல்லுங்கள் கோத்தா) என்ற வார்த்தையை ஆர்ப்பாட்டக்காரர்கள் பாடலாகப் பாடிக் கொண்டிருந்தனர். பல்கலைக் கழக மாணவர்கள் பலநூறு பேர் பெருந்திரளாகத் திரண்டிருந்தமையால் அசம்பாவிதம் இடம்பெற்றுவிடக்கூடாது என்பதிலும் பாதுகாப்புத் தரப்பு அதீத எச்சரிக்கையைக் காட்டியது.

**நுவரெலியா**

வசந்த காலத்தை முன்னிட்டு, நுவரெலியாவில் வசந்தகால நிகழ்வுகள் கோலாகலமாகக் கொண்டாடப்படுவது வழமையானது. இந்த வருடத்துக்கான வசந்தகால நிகழ்வுகளுக்கு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, நாடு இப்போதிருக்கும் நிலையில் இந்த நிகழ்வுகள் தேவைதானா? என்று கேள்வியெழுப்பி சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிறிது நேரத்திலேயே ஆர்ப்பாட்டம் தீவிரம் பெறத் தொடங்கியது. ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். இதையடுத்து நிகழ்வுகள் அனைத்தும் இடைநடுவில் கைவிடப்பட்டன. பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

**மொரட்டுவ**

இதேவேளை, மொரட்டுவ மாநகர சபையின் பிரதான நுழைவாயிலுக்கு அருகிலும் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது. மரத் தொழிலில் ஈடுபடுபவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வில்லோரவத்தை மரக் கூட்டுத்தாபனத்தில் இருந்து மொரட்டுவை மாநகர சபைக்கு பேரணியாக சென்று அங்கு அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. மொரட்டுவ மாநகர சபையில் உள்ள ஜே.வி.பி. உறுப்பினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதைவிட பருத்தித்துறை தொடக்கம் தெய்வேந்திர முனைவரை ஐக்கிய பெண்கள் சக்தியினால் அரசாங்கத்துக்கு எதிராக பேரணியும் நடத்தப்பட்டு வருகின்றது. அத்துடன், கொழும்பின் சில பகுதிகளிலும் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது. அடுத்தடுத்த நாள்களில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை தீவிரப்படுத்த ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன தீர்மானித்துள்ளன என்றும் தெரியவருகின்றது. (அ-ம)

## ஆளுங்கட்சி...

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பிலும், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை சம்பந்தமாகவும் இதன்போது விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் விரிவான எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. (ம-44)

## மேல்மாகாணத்தில்...

முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமையைக் கண்டித்தும் போராட்டங்கள் இடம்பெற்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில் மேல் மாகாணத்தில் நேற்று நள்ளிரவு முதல் இன்று காலை 6 மணிவரை பொலிஸ் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று முதல்கட்டத் தகவல் வெளியிடப்பட்டது. (ம-44)

## அமைதியாக...

மக்களின் சீற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், போராடும் மக்கள் அமைதி வழியில் போராட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர், ஜனாதிபதி இல்லச் சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

'மிகப்பெரிய சவாலான நிலைமை இலங்கையில் ஏற்பட்டிருக்கின்றது. விலைவாசிகள் உயர்ந்துள்ளன. ஆனாலும் யாழ். மாவட்ட மக்களை பொறுத்தவரை இது புதிதல்ல. தெற்கு மக்களுக்கு புதியதொரு சம்பவமாகவே இருக்கும். நேற்று (நேற்றுமுன்தினம்) அதற்காக ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்று அது வன்முறையாக மாறி இருக்கின்றது. நாங்கள் வன்முறையிலிருந்து வந்த மக்கள். மீண்டும் அதனை நோக்கிப் போகக்கூடாது. மக்களுடைய போராட்டத்தின் வேதனையை உணரக்கூடியதாக இருக்கின்றது. போராட்டத்தை அமைதியாக செய்ய வேண்டும். வன்முறை இல்லாமல் போராட்டங்களை செய்து தீர்வை நோக்கி செல்ல முடியும். எந்த அரசிடமும் எந்தத் தலைவரிடமும் உடனடி தீர்வு இல்லை. தற்போதுள்ள சிக்கலுக்குள் தீர்வு பெற வேண்டுமாக இருந்தால் நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எங்களால் முடிந்த ஆலோசனைகளை முயற்சிகளை வழங்கி ஒரு தீர்வை காண வேண்டுமே தவிர வன்முறை ஒருபோதும் தீர்வாகாது' - என்றார். (அ-ஒ-20)

## பின்னணியில்...

திட்டமிட்ட அடிப்படையில் தூண்டப்பட்டுள்ளனரா என்பது சம்பந்தமாகவும் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் இவ்வாறு என்று சிரேஷ்ட பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மிரிஹான பகுதியில் இடம்பெற்ற போராட்டத்தின்போது மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை பொலிஸார் எவ்வித அதிகாரத்தையும் பயன்படுத்தவில்லை. மக்களின் போராடும் உரிமைக்கு அவர்கள் மதிப்பளித்தனர். எனினும், இரவு 10 மணிக்கு பிறகு போராட்ட வடிவம் மாறியுள்ளது.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் ஆரம்பத்தில் எச்சரிக்கை விடுத்தனர். எனினும், போராட்டக்காரர்கள் கட்டுப்படவில்லை. அதன்பின்னர் தண்ணீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னரே கண்ணீர்ப்புகை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி சம்பவத்தின்போது பெண்ணொருவர் உட்பட 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. சி.ஐ.டியினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

போராடும் உரிமையை பொலிஸார் மதிக்கின்றனர். அதற்கு அனுமதி வழங்குமாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனினும், அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல், தீ மூட்டுதல் உள்ளிட்ட சம்பவங்கள் இடம்பெற்றால் பொலிஸார் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தவே செய்வார்கள்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் உட்பட விசேட சட்டம் எதுவும் பயன்படுத்தப்படமாட்டாது. சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை உட்பட சாதாரண சட்டத்தின் பிரகாரமே அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்' - என்றார். (அ-ம-44)

## கோத்தாவின்...

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டார். அவரைக் காப்பாற்ற பொலிஸார் முயற்சி எடுத்தபோதும் அதையும் மீறி தாக்குதல் நடத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பேரணி, யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்தது. இதன்போது அங்கு அருண் சித்தார்த் தலைமையிலான கும்பல் தேசியக் கொடியை ஏந்தியவாறு நின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் குழுவினருக்கும், அருண் சித்தார்த் தலைமையிலான கும்பலுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. ஆயினும் அங்கிருந்த மக்களை அருண் சித்தார்த் கும்பல் தாக்கமுற்பட்டது. அதனால் மக்களும் தற்காப்புக்காக திருப்பி தாக்கினர்.

ஒரு கட்டத்தில் அருண் சித்தார்த் மீது செருப்படி நடத்தப்பட்டது. தொடர்ந்து அவரது ஆதவாளர்கள் மீதும் அவர் மீதும் ஹெல்மட் மற்றும் தடிகளால் சரமாரியான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அருண் சித்தார்த்தை ஒருவாறு மீட்ட பொலிஸார், முச்சக்கர வண்டியில் ஏற்றி பாதுகாப்பாக அனுப்பி வைக்க முற்பட்ட போது, முச்சக்கரவண்டியை சுற்றி வளைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் அடிதாங்க முடியாமல் தப்பினோம் பிழைத்தோமென்று அந்தக் கும்பல் ஓடி மறைந்தது. அதன் பின்னர் பொதுஅமைதிக்குக் குந்தகம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் அருண் சித்தார்த் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஒ-26)

## ஐக்கிய....

யில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் பல இடங்களில் வலுவடைந்து வருகின்றன. இந்த நிலையில் இன்று 'பருத்தித்துறை தொடக்கம் தெய்வேந்திர முனை வரை' ஐக்கிய பெண்கள் சக்தியால் பேரணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக நேற்றுக்காலை கச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நகரப்பகுதியை நோக்கி பேரணி இடம்பெற்றது. பேரணியில், ஹிருணிகா பிரேமச்சந்திர, உமாச் சந்திர பிரகாஷ் உள்ளிட்ட கட்சியின் அமைப்பாளர்கள் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம)

## இடைக்கால...

பதவிகளை துறந்துவிட்டு, சுதந்திரக்கட்சி அரசில் இருந்து வெளியேறும். இதற்கு மத்திய செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது இவ்வாறு சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றிரவு கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சு.கவின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர கூறியவை வருமாறு,

'அரசுடன் பல விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளன. ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது 15 விடயங்கள் முன்வைக்கப்பட்டன. சர்வக்கட்சி மாநாட்டில் 22 யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இவை தொடர்பில் இன்னும் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

எனவே, தற்போதைய நிலையில் இடைக்கால அரசொன்று அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசில் இருந்து வெளியேறுவோம். அமைச்சு பதவிகளை துறப்போம். இது தொடர்பில் ஜனாதிபதிக்கு நாளை (இன்று) கடிதம் அனுப்படும்' என்றார்.

அதேவேளை, நாட்டில் தற்போதுள்ள அமைச்சரவையை பதவிநீக்கம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் கேட்கின்றோம். நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தும் கட்சிகளுடன் பேச்சு நடத்தி, பொது இணக்கப்பாட்டுடன் இடைக்கால அரசொன்றை அமைக்கவும் என்று விமல், உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த இடமாற்ற பட்டியலில் முறைகேடு

## இலங்கை ஆசிரியர் சங்கம் ஆளுநருக்குக் கடிதம்

**யாழ்ப்பாணம்,ஏப்.2**

**வடமாகாண கல்விப்பணிமனையால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த இடமாற்றப் பட்டியலில் பக்கச்சார்புகள் உள்ளன. தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இடமாற்றம் நடைபெறவில்லை என்று குற்றஞ்சாட்டி, வடமாகாண ஆளுநர் மற்றும் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் முறைப்பாடு அனுப்பியுள்ளது.**

இடமாற்றத்துக்குத் தகுதியான பலரது பெயர்கள் இடமாற்றப் பட்டியலில் நிராகரிக்கப்பட்டுள்ளன. சிலருக்கு மட்டும் இடமாற்றச் சபையின் பரிசீலனையின்றி இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இடமாற்றம் நிராகரிக்கப்பட்டதாகப் பெயர் குறிப்படப்பட்டுள்ள பட்டியலிலுள்ள சில ஆசிரியர்களுக்கு வெளி மாவட்டங்களிலிருந்து யாழ்ப் பாண மாவட்டத்துக்கு ஏற்கனவே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் சிலர் இடமாற்றப் பட்டியலில் தகுதி பெற்றுள்ள போதும், இடமாற்றப் பரிசீலனைக்கு முன்பதாகவே இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண கல்விப் பணிப்பாளரால் இடமாற்ற நடைமுறைகளில் பாரபட்சங்கள் தொடர்ச்சியாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவரது இந்த நடவடிக்கை தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குச் செல்லத் தூண்டும். பணிப்பாளரது அதிகார துஷ் பிரயோகம் மற்றும் பக்கச் சார்ப்பான செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று சங்கம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (ஒ-4,20)

# பொருளாதார நிபுணர்கள் குழுவை நியமித்து நாட்டின் நெருக்கடிகளுக்கு தீர்வு காணுங்கள்

## பொதுபல சேனா வலியுறுத்து

கொழும்பு,ஏப்.2

ஆளும் மற்றும் எதிர்த் தரப்பிலுள்ள சகல பொரு ளாதார நிபுணர்களையும் ஒன்றிணைத்து விசேட குழுவொன்றை நியமித்து, நாட்டின் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வழியை ஆராய வேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பு வலி யுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் அதன் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகளின் உண்மை நிலைவரம், அதற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பில் அரசாங்கம் முழுமையான அறிவிப்பொன்றை வெளியிட வேண்டும். அதனை விடுத்து ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொண்டிருப்பது பொருத்தமற்றது. மக்கள் பதற்றமடைந்து, வீதிக்கு இறங்கிப் போராடத் தொடங்கினால்,



பிரச்சினைகள் மேலும் உக்கிரமடையக் கூடும். அரசாங்கத்தின் மீது மக்களுக்கு தற்போது துளியளவும் நம்பிக்கை இல்லை. இது துரதிர்ஷ்டவசமான நிலைமையாகும். கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தியதைப் போன்று , இந்த நெருக்கடிகளையும் முறையாகக் கட்டுப்படுத்தி அரசாங்கம் மக்கள் மத்தியில் மீண்

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாசஸ்தலங்களிலும் மின்வெட்டு

கொழும்பு, ஏப். 2

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மிதிவெல உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கும் மின்வெட்டு நேரங்களில் மின்சாரம் வழங்கப்படமாட்டாது என்று நாடாளுமன்ற படைக்கலச்சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்றத்துக்கு 80 புதிய அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இதனாலேயே கட்சித் தலைவர்கள், அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு அனுமதியளித்தனர். அவர்கள் நாடாளுமன்ற உணவகத்தைப் பயன்படுத்தவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

(ஒ-14,ரி1)


**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி பல்கலைக்கழகத்திற்கு அருகில் வீடு வாடகைக்குண்டு.

077 112 0314

**கடை வாடகைக்கு உண்டு**

தொழில்நுட்ப கல்லூரி அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு. வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புக்கு: 076 0098 793

(CS 19166) (1/6)

**வீட்டு பணிப்பெண் தேவை**

குழந்தை பெற்ற தாய், சேயுடனான ஐந்து பேர் அடங்கிய குடும்பத்திற்கு பணி செய்ய பணிப்பெண் தேவை. ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

இடம்:- குளப்பிட்டி (CS 19169) (4/6)

தொடர்புக்கு:- 077 172 7241

**வேலையாட்கள் தேவை**

மன்னாரில் உள்ள வெதுப்பகத்திற்கு, வேலை தெரிந்தவர்களும் (Bass), உதவியாளர்களும் (Labours) தேவை.

076 089 8020

(CS 19134) (4/6)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஓட்டுமடச்சந்தியிலிருந்து முதலாம் ஒழுங்கை பகுதியில் இரண்டு பரப்பு (2) காணி சுற்றுமதிலுடன் அவசர விற்பனைக்கு உண்டு. குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்ய ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். அத்துடன் (4 1/2) நான்கு அரை பரப்பு காணியும் 20 பரப்புக்காணியும் விற்பனைக்கு உண்டு. (இரண்டு பரப்புகளாகவும் பிரித்து கொடுக்கப்படும்)

பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM

தொடர்பு : 077 862 6251, 074 008 9086

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 70 பரப்புக்காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)) மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை

- 16 அடிப்பாதையுடன்
- இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம்-பூநகரி பிரதான வீதியில் (A-32) இருந்து 200M தூரத்தில்
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நாவற்குழி சந்தியில் இருந்து 2 1/2 KM தூரம் (A-9)
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழல் உள்ள காணி (நல்ல சூழல்)
- ஒருபரப்பின் விலை ( 300000/= ) மூன்று லட்சம் மட்டும்.

தொடர்பு :

074 291 3725 /074 291 3726/074 291 3727

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடியில் 06 பரப்புக்காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-09 றோட்டின் முகப்பில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- பிள்ளையார் வீதியில் (பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதி)
- 20 அடி பாதையுடன்

தொடர்பு : 077 623 4204

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 61 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் 224 தென்னைகள் உள்ளன.

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

ஒரு பரப்பின் விலை 450000.00

(தரகர் தேவையில்லை)

ஜெயம்:-

077 814 7389, 077 241 7589


## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 05 . 1948



மறைவு 30 . 03 . 2022

**அமரர் தாமோதரம்பிள்ளை சிவசுப்பிரமணியம்**

உறுட்டாலையைப் பிறப்பிடமாகவும் செம்பாடு தூதாவளை கரணவாய், கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சிவசுப்பிரமணியம் கடந்த (30.03.2022) புதன்கிழமை இரவு இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை நாகம்மா அவர்களின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் ஆருயிர் கணவரும், உஷா நந்தினி (நியூசிலாந்து), யாதவன், பிரணவன் (அவுஸ்ரேலியா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், துவாரகனின் (நியூசிலாந்து), பாசமிகு மாமனாரும், அபினாஸ் அவர்களின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற பாலசுந்தரம், திலகவதிப்பிள்ளை (கனடா), உமாபதிசிவம், புஸ்பநாதன், (கனடா), காலஞ்சென்ற சரஸ்வதி கிருஸ்ணமூர்த்தி (கனடா), விஜயலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2022) ஞாயிற்றுக கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

0094 774 985641

(ne 18232)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.